
ஞாயிறு வெளியீடு. விலை 0—1—3. REGD. No. M. 4642.



# திராவிடநாடு

மலர் 3.] 31—12—44 [இதழ் 41.

## வேங்கைக் குகையில்!

★★★

இராகம்:- பியாகடை. தாளம்:- ஜம்பை.

பல்லவி.

நீள் வையம் எதிர்த்திடினும்—அஞ்சுதல் இல்லாத்
தோள் வாய்ந்த மூவேந்தர்—சீர் ஆட்சி


அனுபல்லவி.

நாள் என்ற கடல் வெள்ளம் தான்கொண்டு போனதே
கோள் வாய்ந்த பெருந்தீயர் வரவால் இருளானதே.

சரணம்.

யாவரும் ஒன்றே என வாழ்ந்தோமே நாங்கள்
இனம் சாதி மதவெறி அலங்கோலம்
மேவி வீழ்ச்சிநிலை அடையவும் ஆனதே
வேங்கைக் குகைக்குள் நரி வாழ்ந்திடவும் ஆனதே.

பாரதிதாசன்.



தொடர் கதை,

★

சௌமியன்.

# பார்வதி பி. ஏ;

கதை கற்பனையே, கதையில்வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவனவல்ல.

"ஆண்டிக்கு ஆண்டி உதவி செய்யாமலிருக்கமுடியுமா சாமி. எனக்கு என்ன வேலை கொடுக்கிறீர்களோ அதனை நான் செய்துமுடிக்கிறேன். ஆனால் எனக்குக் கொஞ்சம் மட்டமானபுத்தி. ஆகவே எந்தக்காரியத்தை நான் செய்யவேண்டுமானாலும், கொஞ்சம்நிதானமாக நடக்கும்'' என்று பண்டாரக்கோலத்திலிருந்த பிரமநாயகம்கூறிடக்கேட்ட பார்த்திபன், மகிழ்ந்து, "அன்னாபிஷேகம்! நான் சொல்லப்போகும் விஷயம் உனக்கு அதிக ஆச்சரியமாக இருக்கும். வெளியே தெரிந்தால், காரியம் கெட்டுவிடும். நீ இரகசியத்தைக் காப்பாற்றக்கூடியவனா என்பது எனக்குத்தெரியவேண்டும் முதலில். உளறுவாயனாக இருந்தால், உன்னால் எனக்குஉதவிக்குப்பதில் உபத்திரவம்தானேவரும். ஜாக்ரதையாக இருக்கவேண்டும், இந்தவிஷயத்திலே'' என்று பீடிகையைப்பலமானதாக்கினான். பிரமநாயகம், "சாமி! என்னால் எது முடிவதானாலும் முடியாமற்போனாலும்சரி, ஒன்று மட்டும் நிச்சயமாக என்னால் முடியும். வாய்க்குப்பூட்டுப்போட்டுவிட்டால்,பிறகு பூட்டினவர்களாகத்திறந்தால்தான் திறக்கும். இரகசியத்தைக்காப்பாற்றத் தெரியாவிட்டால், இந்தக் காவிஉடை எங்கள் குடும்பத்திலே நாலு தலைமுறையாக இருந்திருக்கமுடியுமா? சாயம் அதிக சீக்கிரத்திலேயே வெளுத்துவிட்டிருக்குமே'' என்றுகூறிப் பார்த்திபனுக்குத் தைரியமூட்டினார். நெடுநேரம் யோசித்துவிட்டு, "ஆண்டி! அதிக சிரமம் ஒன்றுமில்லை. அடுத்த பௌர்ணமிக்கு, அதாவது இன்னம் ஆறுநாட்களில், ஒரு ஆயிரம் ஆண்டிகளைத்திரட்டித்தர உன்னால்முடியுமா?'' என்று பார்த்திபன் கேட்டான்.

பிரமநாயகம், "இதுதானா பிரமாதம்? ஒரு ஆயிரம் என்ன, ஒன்பது வேண்டுமானாலும் திரட்டலாம். ஆண்டிகளுக்குப் பஞ்சம் இல்லை, ஆனால், ஆயிரம் ஆண்டிகள் ஏன்? எதற்காக என்று சொல்லி அவர்களைத் திரட்டுவது? கேட்பார்களே!''—என்று கேட்டான்.

"பௌர்ணமி அன்று பண்டாரங்களுக்குப்பழம் பாயாசத்துடன்சாப்பாடு''

"சாப்பாடா? ஆயிரம் ஆண்டிகள் போதுமா, ஐம்பதாயிரம் போதுமா? என்ன சாமி! இதை ஒருபெரிய வேலை என்று சொல்கிறீர். சோறு என்றசொல் கேட்டாலே நூறுகாதம் ஓடிவருமே பண்டாரக்கூட்டம், இதற்கு நான்வேண்டுமா வேலைசெய்ய. அரை நாளிலே முடித்துவிடக்கூடிய அற்பகாரியம் இதற்குஆறு நாள் தவணை ஏன்?''

"அதிகம்பேர்வேண்டாம், ஆயிரம் போதும். ஆயிரம் ஆண்டிப்பயல்களைச் சமாளிப்பதே கஷ்டம்''

"அது உண்மைதான். ஆள் ஒன்றுக்கு ஒருவேளைக்கு அரைப்படிஅரிசி கேட்பார்கள். நாள் ஒன்றுக்கு நாலுவேளை போடுவதானாலும் சலிக்கமாட்டார்கள். ஆமாம் சாமி! ஆயிரம் ஆண்டிகள் வேண்டுமென்றீரே, ஆண்கள்மட்டுமா, பெண்களும் வேண்டுமா?''

"பெண்கள் வேண்டாம்.''

"சரி, ஒரு பெரிய தொல்லைவிட்டது. பெண்களையும் கொண்டுவருவதென்றால் பெரிய சிரமம் இருக்கிறது. இந்தப்பயல்களிலே நாலுக்கு ஒண்ணு, ஆறுக்கு ஒண்ணு என்று இருக்கும், அதுகளை அழைத்துவந்தால் அந்தப்பஞ்சாயத்தைத் தீர்த்துவைக்கவே நமக்குநேரம் இராது. சாமி, சாப்பாடு எந்த இடத்திலே?''

"இங்குதான் இரகசியம் வேண்டும். சாப்பாடு நடைபெறப் போகிறஇடத்தை முன் கூட்டிச் சொல்ல முடியாது. பௌர்ணமி யன்று அந்த ஆயிரம் ஆண்டிகளும் இரவு 8-மணிக்குள் நான் குறிப்பிடும் இடம்வந்து சேரவேண்டும். அங்கே பூஜை நடைபெறும். பூஜைக்குப்பிறகு போஜனம், அந்தபோஜனம் நடைபெறுகிற இடத்திற்குப்பண்டாரங்களை நான் அழைத்துச்செல்வேன், இடத்தைமட்டும் இப்போது சொல்லமுடியாது. இதற்குச் சம்மதிப்பார்களா பண்டாரங்கள்?''

"இதற்குமட்டுமா! இன்னம் ஏதாவது ஏழெட்டு கண்டிஷன் சொன்னாலும் சம்மதிக்க ஆண்டிகள் உண்டு. சாமி! ஆயிரம் ஆண்டிகளுடன், ஆறுநாட்களிலே அதாவது பௌர்ணமி இரவு 8-மணிக்கு நான் தங்களைச் சந்திக்கிறேன், ஆனால் என் சிரமத்துக்கு என்ன தருவீர்? எதையும் முன்கூட்டிப்பேசிமுடித்துக்கொண்டால்பிறகு தகராறு வராமலிருக்கும் அதற்காகத்தான், ஆயிரம் ஆண்டிகளை அன்னம் அளிப்பதாகச் சொல்லிஅழைத்தாலும், அதற்காக நீர் குறிப்பிடும் நிபந்தனையைக் கேட்டுச் சில காவிகள் கிலிகொள்ளும், அதுகளைத் தட்டிக்கொடுத்துக்கொண்டுவரவேண்டும். மேலும் இந்த ஆறு நாட்களிலே என்னென்ன க்ஷேத்திரத்திலே என்னென்ன திருவிழாவோ! திருவிழா பலமாகஇருந்தால் ஆண்டிகள் அங்குதான் போய்விடுவார்கள், போனால் சாப்பாடும் சுகமாகக் கிடைக்கும், காசும் சேரும் கத்திரியும் சுமாராக நடக்கும் என்று அந்தப்பயல்கள், திருவிழா நடக்கும் ஊருக்குப்போய் விடுவார்கள், அப்படிப்போகிறவர்களை மடக்கி அழைத்துவர வேண்டும். ஆக, செய்யவேண்டிய வேலை கொஞ்சம் இருக்கிறது,இதற்காக இந்தக்கட்டைக்கு என்ன தருவதாகச் சாமி தீர்மானித்திருக்கிறது என்பது தெரிந்தால் வேலைசெய்யக் கொஞ்சம் நிம்மதிஇருக்கும்''

"சோறுகிடைத்தால் போதும் என்று சொன்னதுபோய் இப்போது பேரம் பேசுகிறாயா? சரி, சரி, உனக்கு உன் ஆயுட்காலம்வரையிலே சோறுதுணி தருவேன், போதுமா?''

"சாமி! கோபிக்கக்கூடாது, என் ஆயுட்காலம் வரையிலே என்று சொல்லுகிறீர், யார்கண்டார்கள், இன்றோ நாளையோ இன்னம் கொஞ்சம் நேரத்திலோ, இரவோ பகலோ, எந்தநேரத்திலே கைலாயபதி தனது திருவடியிலே என்னைச்சேர்த்துக் கொள்கிறாரோ, எப்படிச்சொல்ல முடியும்! என் ஆயுள்வரையில் காப்பாற்றுவதாகச்சொல்லும் பேச்சு வேண்டாம் சாமி! குறிப்பாக ஒரு தொகை சொல்லிவிடும்''

"பணமா? சரி! நீயே கேள்! என்னதான் வேண்டும்?''

"ஆண்டிக்கு அரைரூபாவீதம் ஆயிரம் ஆண்டிக்கு 500 ரூபாய், தந்தால் போதும்''

"பிச்சைக்காரப்பயல்! சரி ஐந்நூறுதானே வேண்டும், சரிதருகிறேன்''

"தருகிறேன் என்றால்! தேன் என்ற உடனே தித்திக்குமா சாமி''

"தடியா! என்வார்த்தையிலே நம்பிக்கையில்லையா''

"யார் சாமி, சொன்னது அப்படி! ஆனால் பணவிஷயம் பாருங்கோ. கண்ணாலே பார்த்துக்கையாலே தொட்டுத் தட்டிப்பார்த்துக் காதாலே கேட்டாத்தானே ஒரு சந்தோஷம் பிறக்கும். நீங்க தவறாக எண்ணிவிடக்கூடாது, என்சுபாவம் அது. பணத்தை வாங்கிக்கொண்டால் எனக்கு வேலையிலே ஒரு சுறுசுறுப்பு ஏற்படும், பெட்ரோல் போட்டால்தானே மோட்டார் ஓடுது அதுபோல''

"சரி! நான் சீட்டு தருகிறேன் பணத்துக்கு. உனக்கும், நான் ஏற்பாடுசெய்கிற சாப்பாட்டுச் செலவுக்கும் சேர்த்துப் பணம் தருவார். அதைவாங்கிக்கொண்டு நாளைக்கு இதேஇடத்திலேஎன்னை வந்து

(11ம் பக்கம் பார்க்க)

கும்பகோணத்தில்

"சந்திரோதயம்"

தேதி விரைவில்
வெளியிடப்படும்

திராவிட நாடு.

காஞ்சி 31—12—44 ஞாயிறு

# அந்தக்குண்டு!

பிரிட்டிஷ் முதலமைச்சர் சர்ச்சில், கிரீஸ்குழப்பத்தைத் தீர்த்துவைக்கவும், அதன்மூலம், அந்நாட்டுமக்களைக் கொலை கொள்ளை கொடுமையிலிருந்துமீட்கவும், வேட்டுகள்பறந்துகொண்டும், உடலங்கள் வெந்துகொண்டும், மாளிகைகள்இடிந்து கொண்டும், மக்கள் பயத்தால் நடுங்கிக் கொண்டும்இருந்த கிரீசுக்கு, உயிருக்குத் துணிந்துசென்றார். உள்நாட்டுப்பூசலை ஒழிக்க ஒன்றுபட்டகருத்தைத்திரட்ட மாநாடுகூட்டினார். எந்தச்சமயத்திலே இந்தத்துணிவுடன் எப்படிப்பட்ட தலைவர்வந்திருக்கிறார்என்பதை அறிந்து, வீரனுக்கு வாழ்த்துக்கூறவேண்டியிருக்க, கிரீசிலேஒருகயவன் சர்ச்சிலைச்சுட்டான், குண்டு அந்தக்குன்றாத வீரம்படைத்த சர்ச்சில்மீது பாயவில்லை. எதுமறியா இளமங்கைமீதுபாய்ந்ததாம். கிரீஸ்நாட்டுப்பிரச்னைகளும், பிளவுகளும் எந்தஅளவுக்குப்பித்தமனப்பான்மையை உண்டு பண்ணிவிட்டன என்பதைஅந்தக்குண்டு காட்டுகிறது. நாஜிகளால் நசுக்கப்பட்டு நாதியற்றுக்கிடந்த நாட்டுக்கு விடுதலை தந்த வீரனுக்கு, கிரீசில் அக்கயவன்காட்டியதுரோகம், வரலாற்றுச்சுவடிகளிலேபொறிக்கப்பட்டால் எதிர்காலகிரேக்கர்கள்வெட்கித்தலைகுனிவார்கள்என்பதுதிண்ணம். சர்ச்சில் போக்குதவறாகஇருக்கலாம், சமரசம் முறிந்ததே என்ற சலிப்புஇருக்கலாம், ஆனால், அதற்காக இத்தகைய அடாத செயல்புரிந்தது, அறிவிலித்தனம் மட்டுமல்ல, மட்டற்றபோக்கிரித்தனம். அந்தக் குண்டு, விடுபட்டநாளிலே விவேகம் குன்றினால் விபரீதம்ஏற்படும்என்பதைக் காட்டுகிறது. வெறியர்களின்செயலால், ஒருநாட்டுவிடுதலையுங்கூட வீணாக்கப்படுகிறதுஎன்பதைக்காட்டுகிறது. அதுமட்டுமல்ல, நாஜிப்பிடியிலிருந்து விடுபட்ட ஐரோப்பியநாடுகளிலே, உட்பூசல்கள் நிபுணர்களை உருட்டிமிரட்டுமளவு இருக்கிறது என்பதையும் காட்டுகிறது. பிரிட்டிஷ் அரசியல் கட்சிவட்டாரங்களிலே சர்ச்சில் கிரீஸ் விஷயமாகக் கையாளும் முறையைச் சிலர் கண்டித்துவந்தனர். அவர்களின் கண்டனத்தைக் கேலிசெய்கிறது இக்குண்டு! கிரீசிலே, சர்ச்சில் போக்கு அனாவசியமான கெடுபிடியாக இருக்கிறது என்று கூறினவர்களுங்கூட, "சர்ச்சில்மீது கிரீசிலேகுண்டைச்செலுத்தப்பார்த்தான் ஒரு கொடியோன்" என்றசெய்தி கேட்டதும், கிரேக்கப்புரட்சியாளர்களை அடக்கியாக வேண்டும்!' என்று தீர்மானமாகக் கூறுவர். அந்தக் குண்டு சர்ச்சிலின் போக்கை, அகில பிரிட்டிஷ் உலகமும் ஆதரிக்கவேண்டும் என்ற நிலையை உண்டாக்கிவிட்டது. பொதுவாகவே இப்போது நேசநாட்டாரின் முறைகள், கொஞ்சம் தீவிரமானதாக மாறவேண்டியபடிநிலைமைஇருக்கிறது. இத்தாலியில் எதிர்ப்பு, கிரீசில் குழப்பம், பெல்ஜியத்தில் எதிரியின் பாய்ச்சல், ஜெர்மனியில் நாஜியின்எதிர்ப்புஎன்று நிலைமை இருக்கிறது. இந்நிலையில், நேசநாட்டின் முறைபலமானதாக வேண்டியிருக்கிறது. இன்றுகாணப்படும் எதிர்ப்புகளை அடக்கும் சக்தி நேசநாட்டாரிடம் இருக்கிறது. தக்கவிதத்திலே தளராது தக்கபடி அதனை உபயோகிக்கத்தவறக்கூடாது. ஆபத்தினின்றும் மீண்ட, சர்ச்சிலை நாம் வாழ்த்துகிறோம்.

---

## 'அறிமுகப்படுத்துகிறேன்'

(B-பக்கத் தொடர்ச்சி.)

"சர். தியாகராஜசெட்டியார் மரணத்திற்குப்பின்கட்சியின் நிர்வாகஅமைப்பே புதுநிலையாயிற்று. மந்திரிகளே கட்சித் தலைவர்கள் என்ற எல்லைக்குவந்துசேர்ந்தது, மந்திரிகள்தான் தலைவர்கள் என்பதில் எனக்குச்சிறிதும் ஆட்சேபமில்லை. ஆனால் தாங்கள் எந்த இடத்தில் நிற்கிறோம் என்பதை அவர்கள் அடியோடு மறந்துபோனார்களே என்பதை நினைத்தால்தான் எனக்கு ஆத்திரம்வருகிறது. பிராமணரல்லாதார் சமூகமே தங்களுக்காகத்தான் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறதேயன்றி பிராமணரல்லாதார் சமூகத்திற்காக உழைப்பதற்காகத்தான் ஜனங்கள் தங்களைத்தலைவர்களாக்கினார்கள் என்கிற எண்ணம் அவர்களைவிட்டு அடியோடு போய்விட்டது. இந்தக்குற்றத்திற்குஎல்லா மந்திரிகளும் ஆளானவர்கள், பனகால் ராஜா சிறந்தராஜதந்திரிதான். அவரைப் போன்ற ராஜீய நிபுணராக வேறு ஒருவரையும் சென்னைமாகாணம், இதுவரை உற்பத்திசெய்யவில்லை என்பதும் வாஸ்தவம். ஆனாலும் அவர்கூட நான்மேலே படித்த குற்றப்பத்திரிக்கைக்குக் கட்டுப்பட்டவர்தான். மந்திரிகள், பிராமணரல்லாதார்கட்சியின் சார்பாக அந்தபாக்கியம் பெற்றவர்கள் ஜோப்நிறையசம்பளம் வாங்கினார்கள். ஆனால் அவர்களில் இரண்டொருவர் கட்சிப் பத்திரிக்கைக்காக ஏதோ கொஞ்சம் கொடுத்துவந்ததைத்தவிர பாக்கிப்பணம் பூராவும் அவரவர்களின் இரும்புப்பெட்டியிருக்குமஸ்தானத்தையே தேடிச்சென்றது. பிரசாரம்வேண்டும். பிரசாரத்தால் நாங்கள் யோக்யதாம்சம் நிலைத்து நிற்கும் என்கிற யோசனைப்படவுமே அவர்களுக்கு ஏற்படவில்லை. இப்படியிருந்தாலா கட்சி உருப்படும்?"

உருப்படாது என்று தெரிந்துதான் அத்தகைய தலைவர்களிடமிருந்து ஜஸ்டிஸ்கட்சியைமீட்டு பிரசாரயந்திரம் பலமாகயிருக்கும் ஸ்தாபனத்தாரின் மேற்பார்வையின்கீழ் கொண்டுவரப்பட்டது. அது எங்களுக்கெல்லாம் இனிப்பைத் தரும்போது எங்களுக்கு அந்த எண்ணத்தைக்கற்றுக் கொடுத்தவர்களுக்குக்கசப்பானேன்? இது கேள்வியல்ல, சிந்தனை. நீங்கள்தான் இப்பொழுது கேள்விக்குப்பதில் சொல்லாத குறைகளுடன் குலவிக்காலங்கழிக்கத்தீர்மானித்துவிட்டீர்களே உங்களைக் கேள்விகேட்டு என்னபயன்? கேசரியாரே! "ஓய்வுஉறக்கமின்றி உழைத்துஉழைத்துஉடல்நைந்துபோயுள்ளதமது தள்ளாதவயதில் ஈ.வே.ரா அவர்களைக்குறைகூறுவது வீரத்தன்மையின் தர்மநியாயத்துக்கு உடன்பாடானகாரியமல்லவென்பதையும் தெரிவிக்க விரும்புகிறோம்" என்றுநகராதூதன் ஆசிரியர் 29-3-3ல் கூறிய நன்மதியைத்தாங்கள் ஏற்றுக்கொள்ளாதகாரணம் என்ன? அவர் அன்றுசொல்லியிருக்கிறார் "சுயமரியாதை இயக்கமும் ஜஸ்டிஸ்கட்சியும்இன்றுஒன்றுசேர்ந்திருப்பதால்தான் நெய்யிக்குத்தொன்னை ஆதாரமாகவும் தொன்னைக்கு நெய் ஆதாரமாகவும் இருப்பது போல நிலைமை ஒருவாறு இருந்துவருகிறது. இந்தஸ்திதியில் ஒன்றைவிட்டு மற்றொன்றுபிரிந்துவிடுமானால் அதன்பிறகு வேங்கையைக்கூட்டுறவுகொண்டு எதிர்த்தபசுக்கள் தனித்தனியாகப்பிரிந்த கதைமாதிரிதான்." என்று.

பட்டம் பதவிகளைவிட்டுவிடுவது என்பதுபணத்தால் பதவியைப்பெறமுடியும் என்ற மனப்பான்மைகொண்டு, பார்ப்பனரல்லாதார்பெயரைக் கூறிஅரசியல்சூதாட்டத்தைநடத்தி, அந்தஸ்தைப் பெற்று, ஆரியத்தை அப்புஅழுக்கின்றி ஆதரித்து அரசியல்வாழ்வைநடத்திவரும் பூர்ஷ்வாக்களின் பிடியிலிருந்து ஜஸ்டிஸ்கட்சியை மீட்பதற்காகச்செய்யப்பட்டபுரட்சி. புரட்சிமுடிந்தபின்ஸ்ரீமான்கள் நெடுநாள்வரையிலே தமது மாளிகைகளையும் மனைவிகளையும் மதுக்கிண்ணங்களையும் மந்தகாசவாழ்வையும் எண்ணி எண்ணிஏங்கி சமதர்ம ஆட்சியைச்சாய்த்துவிடுவதற்காகச் சதிபல செய்து தமது நிதியைக்கொண்டு பிறரின்மதியை விலைக்குவாங்கமுடியுமென்ற மனப்பால்குடித்து கடைசியில் போனது திரும்பாது என்ற முடிவுக்கு வந்தனர். ஜஸ்டிஸ் கட்சியிலிருந்துவந்த ஜெமீன் செல்லப்பிள்ளைகளும், பதவிதாசர்களும், தொண்டர்களின் துயரத்தைச்சிரித்தமுகத்துடன்கண்டு[illegible]ருக்கதலை மூடிக்கொண்டவர்களும், தேர்தல்காலத்திலே தேடிப்பிடித்து தேனே, பாலே, அமுதே என்றுபேசி தேர்தல்முடிந்ததும் திருமுகத்தைக்காட்டாது திரிந்த திருவாளர்களையும் நாடு இனி ஏற்காது என்பதைத்தான். சேலம் எடுத்துக்காட்டிற்று. இந்தப்புரட்சியால் மருட்சி அடைந்தோர் ஆரம்பிக்கும் எதிர்ப்புரட்சி (Counter Revolution)க்குத் தெரிந்தோ தெரியாமலோ தாங்கள் எடுபிடியாகிறீர்கள், ஏன் இந்த வீழ்ச்சி!

## 'அறிமுகப்படுத்துகிறேன்'

(8ம் பக்கத் தொடர்ச்சி)

பார்ப்பதிலும் இவரது ஓய்வுநேரம் பயன்படுத்தப்படுகிறதாம். வருஷா வருஷம் தமது சொந்தப் பட்ஜட் தயாரித்துக் கொண்டு அதற்குமேல் நிகரவருமானம் போட்டுப்பார்க்கத் தவறுவதில்லையாம் இவைகள்தான் இவரது பிரதானவேலை மற்றப்படி கட்சியிருந்தாலென்ன அழிந்தாலென்ன"

இப்படிப்பட்டத்தலைவர்களிடமிருந்து ஜஸ்டிஸ்கட்சியை விடுவித்ததீயசெயலுக்காகத்தான் பெரியார்மீது கேசரியின் தீப்பொறி கக்கப்படுகிறது. இதுஎன்ன வெட்கக்கேடு! சாதாரணத் தலைவர்கள் தான் இப்படியிருந்துவந்தார்கள் என்று கேசரி எழுதிற்றுபோலும்,கட்சியின் தலைவரைவிட்டு விட்டதுபோலும் என்று கருதவேண்டாம். இதோ, பவனி வருகிறார் பொப்பிலிராஜாசாகேப்.

"இன்று முதல் மந்திரிஸ்தானத்தை வகிப்பவர் கனம் பொப்பிலிராஜா. ஜஸ்டிஸ்வர்திகளும் கட்சி அபிமானிகளும் இவரைப் பார்ப்பதென்றால் குதிலைக் கொம்புதான். இப்பவே ஸ்டாலின் மாதிரியும் ஹிட்லர் மாதிரியும் நடக்க வேண்டுமென்று ஆசைப்பட்டு விட்டாரோ என்னமோ.சாதாரணமாக இந்தம கானுபாவனின் பேட்டியே சித்திப்பதில்லை. பேட்டிக்கு மனுபோட்டு பதிலுக்கும்-கார்த்திருக்கவேண்டும்.அப்படிக் காத்திருந்து பேட்டி கொடுப்பதாகச் சம்மதித்தால் தேதியும் நேரமும் அறிவிக்கப்படும். அவ்வாறு அறிவித்தபின்னர் அந்தகுறிப்பிட்ட தினத்தில் சுட்டிக்காட்டிய நேரத்தில்தான் ராஜாதிராஜன் ராஜமார்த்தாண்டன் பொப்பிலிராஜாசாகேபைபேட்டிகாணவேண்டும். டெமாக்ரட் அதாவதுகுடிமக்கள்கட்சிஎனச்சொல்லப்படும் தலைவரே குடிதழுவி நடக்கும் யோக்கியதை. எப்படியிருக்கிறது பார்த்தீர்களா?"

பார்த்தோம் கேசரியாரே! பதைத்தோம் உம்மைப்போலவே, அதனால் தான் சத்திரத்திலே சாப்பிட்டு ரயில்வே ஸ்டேஷனிலே படுத்துகிராமப்புறத்திலே திரிந்துதம்மைப் பேட்டிகாண மக்கள் வருகிறார்களா என்று காத்திராமல் தாமாகவே மக்களிடை உலவி ஜஸ்டிஸ் கட்சியை மக்களுக்குத் தெரியச் செய்த பெரியாரின் தலைமைப்பதவியை நாங்கள்போற்றுகிறோம். உமக்கு ஏன் அன்று இருந்த நினைப்பு தலைகீழாக மாறிவிட்டது? சொந்த விவகாரத்திலே தலையிட வேண்டாமென்று எச்சரித்தால் நான் சும்மாயிருந்துவிடுகிறேன். நகைப்புக்கிடமாக உம்முடைய போக்கைக்கண்டு நாடுசும்மாயிராதே நான் என்ன செய்யட்டும்?

கேசரியாரின் கோபம் மந்திரிமார்களோடு நின்றுவிடவில்லை. மலைஏறிச் சென்று பாண்டியனுரையும் கூடத்தாக்கலாயிற்று, கேளுங்கள் கேசரியின் பேச்சை.

"சுயமரியாதைக்கட்சித் தலைவராகவும் ஜஸ்டிஸ் கட்சித்தலைவராகவும் பாண்டிய நாட்டுப்பிரதேசத்தில் இருக்கிறாரே தோழர் சௌந்தரபாண்டிய நாடார் அவருக்குமட்டும் இதில் பங்கில்லை என்று நினைக்கிறீர்களா? சுயநலம் சுயஜாதி, என்கிற அசட்டுத்தனமான அழுக்கு இவரது தேகத்தில் ஒட்டவில்லையானாலும் "நமக்குமட்டும் என்ன, தலை எழுத்தா?" என்கிற ஒற்றைப்படைசலிப்பு இவருக்கு ஜாஸ்தி. இவர்மட்டும் கொஞ்சம்மனசு வைத்தால் தென்ஜில்லாக்கள்பூராவிலும் எதிரிகளை என்னசேதிஎன்று கேட்டுவிடலாம். எல்லோரும் சம்பார்த்தனையைப்பெரிதாக எண்ணும்போது நான் மட்டும் சோடையா' என்று கருதிக் கொண்டு ஏலக்காய் தோட்டத்தைக் காப்பாற்றப்போய்விட்டதால்தான் தொல்லை அதிகப்பட்டுவிட்டது"

மலையை வளப்படுத்திக்கொண்டிருந்த அதேநேரத்தில் மக்கள் மனதை வளமாக்கும் பணியிலும் பாண்டியனுர் ஈடுபட்டிருந்தாரென்பதையும் மதிக்க மறுத்தவர்தான் நண்பர் கேசரியார். இப்படி அவர் கண்டிக்காத தலைவரில்லை, காணுதகுறையில்லை, கேட்காத கேள்வியில்லை, இதிலும், விசித்திரம் என்னவென்றால் எந்தத்தலைவர்களின் போக்கை எந்தப் பாண்டியனுர் கண்டித்தாரோ அதே பாண்டியனுரையும் அந்தத்தலைவர்கள் பட்டியிலேயேசேர்த்துத்திட்டியதுதான். பாண்டியனுரைப்பற்றி கேசரி கூறியிருப்பது நாட்டுமக்களுக்குக் கோபம் ஊட்டக்கூடியது என்றபோதிலும்மற்றத்தலைவர்களைப்பற்றி மக்கள் மனதிலே கொதித்துக்கொண்டிருந்த அதிருப்தி ஆலாபனத்தோடு இதையும் சேர்த்துத் தந்ததால் மக்கள்கேசரியை அந்தக்காலத்திலே மன்னித்துவிட்டனர்.

பொதுவாகவே ஜஸ்டிஸ் கட்சிஅந்தக் காலத்திலே எந்த நிலைமையிலிருந்தது என்பதைக் கேசரியின் வாசகமூலமே கேளுங்கள்.

"கட்சியின் பேரால் யாரார் உயர்ந்த அந்தஸ்தில் இருக்கிறார்களோ, யாரார் அந்தப்பெயரை உபயோகித்துச் சொந்த விஷயங்களைச்சாதகப்படுத்திக் கொள்கிறார்களோ, யாரார் ஜஸ்டிஸ்கட்சிஅடிக்கரும்பின் ருசியைஅனுபவிக்கிறார்களோ அவர்களுக்கும் இந்தப்பிசகில் பங்குண்டு. சம்பளம் வாங்கிக்கொடுப்பதற்கும், அந்தஸ்தைத் தேடிக்கொடுப்பதற்கும், கவுரவத்தைப் பெருக்கிக்கொடுப்பதற்கும் கட்சிப்பெயரை பயன்படுத்திக் கொள்ளும் பேர்வழிகள் இந்தக்கட்சியை அந்தஅளவோடு விட்டு விடுகின்றனர். கட்சியை உருக்குலையாது காப்பாற்ற வேண்டுமே என்ற சிரத்தை அவர்களுக்கு இருப்பதாகவே காணேம். மாநாடுகள் கூட்டுவிக்கும் சந்தர்ப்பங்களைத்தவிர—எதிர்ப்புக்கட்சியால் தாக்கப்படுகிற நாட்களைத்தவிர்த்து—இதர நாட்களில் ஜஸ்டிஸ்கட்சி என்பதாகவும் ஒருகட்சியிருக்கிறதா என்கிற நினைப்பூட்டும் வழிதுறை எதுவுமிருப்பதாகத் தெரியவில்லை.எதிர்ப்புக்கட்சிப் பத்திரிகைகள்தான் ஜஸ்டிஸ் கட்சிக்கு உயிர்கொடுத்து வருவதாகச் சொல்லவேண்டியதேற்படுகிறது.

பேருக்கு "ஜஸ்டிஸ்" பத்திரிகையும் வாரம் இருமுறை "விடுதலை'யும் வெளியிட்டுக்கொண்டுதானிருக்கிறார்கள். ஆனல் அதன்பயன் என்ன? ஜஸ்டிஸ் பத்திரிகையை எத்தனைபேர் படிக்கிறார்கள்? இது நாளுக்கு நாள் வளர்கிறதா? குன்றுகிறதா? பிராமணரல்லாதார் சமூகத்துக்காக உழைக்கும் இப்பத்திரிகையை எல்லா பிராமணரல்லாதாருமே ஆதரிக்கவில்லை என்னும் பழிச்சொல் இருக்கட்டும். ஜஸ்டிஸ்கட்சியால் உத்யோகம் அடைந்தவன், ஜஸ்டிஸ் கட்சியால் உயர்வுக்கு வந்தவன், ஜஸ்டிஸ் கட்சியால் பேரும் பெருமையும் அடைந்தவன்,ஜஸ்டிஸ் கட்சியால் காசுக்காரனுகவும் கவுரவஸ்தனுகவும் ஆனவன் எத்தனை பேர் இதைப்படிக்கிறான்? எத்தனைபேர் அதற்குஒழுங்காக சந்தா கொடுக்கிறான்? எத்தனைபேர் ஆங்காங்கே பரப்பி விருத்திக்குக்கொண்டுவரப் பிரயாசைப்படுகிறான்? விரலிட்டு எண்ணிவிடலாமே!வருடக்கணக்காகப்பணம் கொடுக்காமலும் ஆரம்பமுதல் சந்தாவே அனுப்பிப்பழக்கமில்லாமலும் "கவுரவ" வாசகர்களாக இருந்துவரும் பேர்வழிகளுக்காகப்பத்திரிகையும் ஒரு கேடா?

லாமெம்பர், இடைமந்திரி, கடைமந்திரி, தேவஸ்தானகமிட்டிபிரஸிடெண்டு, கமிஷனர், பப்ளிக்பிராஸிகியூட்டர், ஜில்லாஜட்ஜ், ஜில்லா முன்சீப், சட்டசபை மெம்பர் என்பதாகப் பெரிய பெரிய ஸ்தானத்தை வகித்திருப்போர் மலிந்து கிடக்கிறார்களே இவர்களெல்லாம்ஆளுக்குக் கொஞ்சம்பணம் போட்டால் அவர்கள் இன்ஸால்வெண்ட் ஆகிவிடுவார்களா?"

ஆகமாட்டார்கள் ஆனல் அவர்களுக்குக்கட்சியினிடத்திலேஅக்கரையிருந்தால்தானே கேசரியின் கோரிக்கைக்கு இணங்குவார்கள். மற்ஞெருபுனருத்தாரணத்தலைவரை கேசரி திட்டியுள்ளபடி காட்டுகிறோம்.

"சர். பரசுராமதாஸ் பாத்ரோ இருக்கிறாரே அவர் எப்போதும் ஒரு புல்லுருவியாகவேஇருந்துவந்திருக்கிறார். ஜஸ்டிஸ்கட்சியின்பேரால் இவர்பார்த்த ஆறுவருஷமந்திரிவேலையை ஒருசுத்தபிராம்ணர்பார்த்திருந்தாலாவது அந்தப் பிராமணருக்குக் கொஞ்சம் கட்சிவிசுவாசமிருக்கும்: அதுகூட—சர். பாத்ரோவுக்கு இல்லை."

(4-பக்கம் பார்க்க)

# களம் காணக் காளைகள்

★ "எழினி" ★

களம்காணக் காளைகள் கிளம்பிவிட்டனர். மாவட்டங்களிலே மாநாடு கூட்டியும், கற்றவர்களை அழைத்து கழகங்கள் அமைத்தும், மன்றம்நிருவி மறவுரை பகன்றும் நாட்டிற்கு நலம்புரிய மாணவர்கள் மகிழ்ச்சியோடுமல்கிவிட்டார்கள். மாணவஉலகிலே மலர்ச்சியைக்காண்கிறோம். மலர்ச்சியைக்கொடுக்கும்மனமகிழ்ச்சி இனஎழுச்சியால் ஏற்பட்ட உணர்ச்சியின் விளைவு. மலர்ச்சிஅடைந்த மாணவஉலகம் இன்று மணத்தை வீசத்துவங்கியுள்ளது. முகிலைக் கிழித்தெழும் முழுமதி நீலவானைக் கோலஞ்செய்வதுபோலவும், இதழ்விரித்துத்தலைபசைத்துநிற்கும் தாமரை அலைமோதும்புனல்நிறைந்த பொய்கையைப்பொலிவுபடுத்துவது போலவும், நிமிர்ந்து பரவிநிற்கும் பைங்கூழ்கள் நீள்நிலத்தை எழில்செய்வது போல்வும் மக்கட்கூட்டத்திலே கட்டிளங்காளைகளும் கனிமொழிக் கன்னியரும் மாண்புறுசெயல்கள்புரிந்து வாழ்வை வளம்படுத்துவோராவர். அத்தகையோரிடத்துத்தோன்றும் எழுச்சிமணம் எளிதிலேமறையாது. இளைஞர் உள்ளத்திலே தோன்றும் எழுச்சி, அது கமழுமாறு தூண்டும் தூண்டுகோல்களைத் தூக்கியவரின் துணிவைப்பொறுத்திருக்கிறது. இந்நாட்டிலேபெரியாரும், அவர்காட்டியவழியிலேசென்று கல்லடியும் சாணியடியும் வசையடியும்பெற்று, ஒழுகுகின்ற குருதியை ஒருகையாலேதுடைத்தும், பட்டசாணியை ஒருகையாலே தள்ளியும், வசைமொழிக்கஞ்சி வாய்மூடாமலிருந்தும், கருத்தில்தோன்றியவற்றைஎடுத்துக்கூறிக் கடமையாற்றிவந்தபல தோழர்களும்விதைத்தவித்திலிருந்து தோன்றிய மலரின்மணந்தான் இன்று மாணவஉலகிலேகாணப்படும் எழுச்சி.

காந்தியமும் கதருந்தான் நாட்டைக் கடைத்தேற்றும் என்று கருதிவந்தது போய் அவைகாட்டுமிராண்டிக்காலத்திற்குமக்களைக்கடத்திச்செல்லும் கருவிகளாகும்என்று கருதவும், ஆரியக்கடவுளைவழிபாடுசெய்வதேகற்றதனாலாயபயன்என்று எண்ணிய எண்ணம்போய்வாழ்க்கையை வளம்படுத்த ஆரியக்கடவுள்காரணமில்லையென்றுஎண்ணவும், மாண்பைவளர்க்கவேமதம்இருக்கிறது என்றுகூறியகூற்றுப்போய் மடைமையைவளர்க்கவே மதம்பயன்படுகிறது என்று துணிந்துகூறவும், பழமையைக்காப்பாற்றுவதே பண்பாடு என்று சொல்லியசொல்போய்ப்பழமையிலே பண்பாடு இருக்கிறதாஎன்று பார்ப்பதே பண்பு என்றுசொல்லவும், கலையிலேஇழிவைக்காணாது இன்பத்தைக்காணுவதே முறைஎன்று நினைத்தநினைப்புபோய்இழிவும் இன்னலும் பயக்கும்கலைமானமுடையோர்க்கு ஏற்றதல்ல என்று மதிப்பிடவும் மாணவர்கள் எழுச்சிகொண்டுவிட்டார்கள். தன்மதிப்பு இயக்கம்என்றால் நாட்டிற்குக் கேடுபயக்கக் கிளம்பியகூட்டம்என்று பாரதத்தாயின் தவப்புதல்வர்களாலும் தினப்புளுகுமணிகளாலும்பரப்பப்பட்ட கருத்துக்குச்செவிசாய்த்து வந்த மாணவஉலகம் தன்மதிப்பு இயக்கத்தைப்பற்றி இன்று சிந்திக்கத்துவங்கிவிட்டது. தன்மதிப்புவேண்டுவதோடு தன்இனஉணர்ச்சியும்பெற அது ஆவலோடு முனைந்துநிற்கிறது. மூலைமுடுக்குகளிலிருந்து எட்டைப்புரட்டி அதிலே இயம்பினவெல்லாம்ஏற்றுக்கொண்டு வந்தமாணவர்கள் இன்றுதன் இனம், தன்நாடு, தன்கலைஆகியவற்றிற்கு எட்டிலேகொடுத்த இடம்எது என்று திருப்பிப்பார்க்கத் தொடங்கிவிட்டனர். ஆகவே மாணவஉலகிலே மலர்ச்சியைக் காண நாம்மகிழ்கிறோம்.


உண்மையைக்காணும்இயல்பும், உரிமையைத்தேடும்ஆவலும், ஏற்றதைச்செய்யவேண்டுமென்ற பண்பும் இன்றுமாணவர்களையும் மற்றஇளைஞர்களையும் திராவிடப்பாசறையின்கண்ணே ஒதுங்கச் செய்திருக்கின்றன. பாசறை என்பது பண்டைநாளிலே மாற்றரசனோடு போர்தொடுக்குங்காலத்தில் பகைப்புலத்தில்அமைக்கும் பாடிவீடு. அதற்குஅகழியும் மதிலும் அரண்களாக அமைவதுண்டு. வேந்தனும், படைத்தலைவனும் வீற்றிருக்க வீரர்களைவிளிக்கும் முரசுமுழங்கிக்கொண்டிருக்கும். வட்டுடைஅணிந்து வாளும் கிடுகும்ஏந்தி வீரர்கள் பாசறை புகுவர். வேந்தன்வீரஉரை பகர்வான். படைத்தலைவன்செருக்களம்நோக்கிச் செல்லும்வகையையுணர்த்துவான். வீரர்கள் வெங்களம் நண்ணிவெம்போரிடுவர். இதுபண்டைக்காலப்பாசறையின்இயல்பு. அதுபோல ஆரியத்தை அழித்து அறியாமையைநீக்கி ஆக்கத்தைத்தேடத் தொடுக்கும்போரினைச்செய்ய அமைக்கும் மாநாடே பாசறையாக, அஞ்சாநெஞ்சமேமதிலாக, ஆழ்ந்தஅறிவே அகழியாக, அறிவுரைபகரும் பெரியாரே வீரவுரை பகரும்வேந்தனாக தளபதிகளே படைத்தலைவராக, பகுத்தறிவு என்னும்வாளும் கல்வியறிவு என்னும் கிடுகும்ஏந்திய மாணவர்கள் வீரர்களாக உரிமைப்போர் என்னும் களம்காண அவர்கள் காத்திருக்கின்றனர். பாசறைகள் பல அமைத்தனர் என்றாலும்ஆரியக்கோட்டையைத் தகர்க்கஅமைத்தபாசறைகள்போதா. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஆதிக்கம்செலுத்திவரும்ஆரியத்தை, அழிக்க உள்ளத்திலே உரமும், உரையிலேமுழக்கும், செயலிலேதீரமும்வேண்டும். ஆரியம் அழிக்கப்பட்டால் ஆங்கிலேயம் தானேஅகலும். பிறகு ஆக்கம்பிறக்கும். "சந்திரோதயத்திலே" துரைராஜ் கூறுவதுபோல "ஆரியத்தின் அழிவுக்குப்பின் அபேதவாதம் வந்தேதீரும்."

காளைப்பருவத்தை நண்ணியமாணவர்கள் கழகங்கள்அமைத்துக் கடமையைச் செய்வதிலே களிப்புக்கொள்ளவேண்டும். புத்துலகம்சமைத்துப் புது வழியைக் கண்டுவாழ்வைப் பொலிவாக்கவேண்டிய சிற்பிகள் இன்றையமாணவர்கள். வரும் காலத்தில் அரசியலைஅமைத்து ஆளவக்காரர்களின்கொட்டத்தைஅடக்கி அதனை நடாத்திச்செல்லவேண்டியவர்களும்அவர்களே. அறியாமையோடு போராடி அறிவினைக்கொளுத்தியும், பழமையோடு போராடிப் புதுமைக்குவழிகோலியும், முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைபோடும் மூடநம்பிக்கைகளோடும் அவற்றை வற்புறுத்தும் மூடர்களோடும்போராடி ஆக்கவேலைகள்பலவற்றை ஆற்றித்தர வேண்டியவர்களும் அவர்களே. எனவே மாணவஉலகின் முன்னேநிற்கும் பொறுப்புப்பெரிது; பெரிதென்றாலும் செய்துதீரவேண்டியது. "ஒளிறுவாளருஞ்சமமுருக்கிக் களிறெறிந்து பெயர்தல் காளைக்குக்கடனே" என்ற கூற்றின்படி வாட்போரினைஅழித்துயானையை வெட்டி வெற்றியோடு மீளுதல் தன்மகனாகிய காளையின்கடமை என்று மறக்குடியில்தோன்றிய மகளிர்கூறுவராமே, அதுபோலத் திராவிடநாட்டில்தோன்றியுள்ள சீரிளஞ்செம்மல்கள் உரிமைக்குப் போராடிவெற்றிகொள்ளவேண்டியகடப்பாடுடையோராவர். இன்றைய இளைஞருலகம், செய்யவேண்டியகடமைகளைப் பற்றிச்சிந்தித்துச்செயலிலேகாட்டாவிட்டால் வருங்காலஉலகம் வசைமொழி பகர்ந்தேதீரும். "வாழ்ந்தால் அரசியலிலே, பொருளியலிலே, வாழ்க்கையியலிலே உரிமையோடு வாழ்வோம், அன்றி உரிமைப்போராட்டத்திலே வாழ்நாளைக் கழிப்போம்" என்ற உறுதியை உள்ளத்திலே ஏற்றுக்கடமையைச்செய்யக்காதல்கொண்டுகாளைகள் களம்காண விழைய வேண்டும்.

உலகிலே உரிமை பெற்ற நாடுகளும், பெறவிரும்பும் நாடுகளும், தன் நாடு, தன் இடம், தன்மொழி தன்கலை என்று பிரித்துப்பேசி உரிமைகொள்ள எண்ணும் நிலையில், திராவிடநாடு தன்னைப் பற்றி எண்ணவேண்டாமா? வளர்ந்து வாழ்ந்த திராவிடம்—வாழ வகையிருந்தும் வழியில்லாமல் அல்லலுறும் திராவிடம்—சீர்வளனும் சிலவளனும் நெருங்கிப்பல்வளனும்பெருகிய திராவிடம் தன்னைப்பற்றி எண்ணுவது தவறு? உரிமை பெற்ற நாடுகளில் வரலாற்று ஏடுகளைப் புரட்டினால் அவைகள் இயம்பும்உரிமைப்

(10-ம் பக்கம் பார்க்க)

# கேட்டீரா, விஷயத்தை!



## விசித்திரசித்தர்.

காந்தியாரும் ஜனாப்ஜின்னாவும் மறுபடியும் சந்தித்துப்பேசவேண்டுமென்று, இருவருக்கும், காக்சார் தலைவர், அல்லாமா மஷ்ரிகி, வேண்டுகோள்விடுத்திருக்கிறார். எதற்காகக் காந்தியாரும் ஜனாப்ஜின்னாவும் சந்தித்தனர்? ஒன்றுபட்ட மனத்தினராய், காங்கிரஸ்-லீக் ஒற்றுமையை ஏற்படுத்த! அதன்பயனாக, நாட்டுக்குள்ள அரசியல் சிக்கலைத்தீர்க்க, ஒரு ஆட்சி முறைத்திட்டம்தீட்ட. இக்காரியத்துக்காகவே மீண்டும் இரு தலைவர்களும் சந்தித்துப்பேசவேண்டுமென்று, அல்லாமா கூறினார். ஆனால், அதேவேண்டுகோளிலே, இந்தியாபூராவும் ஏகோபித்து ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒருஆட்சி முறைத்திட்டத்தைத்தாம்தயாரித்திருப்பதாகவும்கூறுகிறார். இவர், தயாரித்திருக்கும்திட்டம், நாட்டுமக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதென்றால், வேறோர் அரசியல் அமைப்புமுறையை ஏற்படுத்தக் காந்தியாரும் ஜின்னாவும் சந்திக்கவேண்டுமென்று இவர் கூறுவானேன்? காசநோய்தீர்க்கும்மருந்து, என்னிடம் இருக்கிறது என்று கூறிக்கொண்டே, காசநோய்போக்கக் கடைவீதியிலே வேறோர் டாக்டர்இருக்கிறார், அவரைப்போய்ப்பாருங்கள்—என்று கூறும்டாக்டரை, என்னவென்றுகருதுவது! அல்லாமாவின்போக்கு இப்படித்தானேஇருக்கிறது. நாட்டுமக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய திட்டம் இவரிடம் இருக்குமானால், அதனைஇவரே நாட்டுமக்களின்முன்நீட்டலாம், நெருக்கடியைஓட்டலாம், ஏன் அதனைச்செய்யவில்லை? அல்லது அல்லாமா அந்த அற்புதத்திட்டத்தைக், காந்தியாருக்கும் ஜனாப் ஜின்னாவுக்கும் அனுப்பிவைக்கலாம்! அதையும்செய்யவில்லை. அந்தஇரு தலைவர்களையும் கலந்துபேசச்சொல்லும் காக்சார்தலைவர், தம்திட்டத்தினைப்பற்றியும் அதேநேரம்பேசுவது, விசித்திரம்! இந்த விசித்திரசித்தரின்போக்கு, இப்படி இருக்கிறது!!

## கருவிலேசிதைகிறது!

சமாதான தூதர்களான சப்ரூஜயகர் எனும் இரட்டையரில் மூத்தவர் துவக்கிய சமரசத்திட்டம் கருவிலேயே சிதைகிறது. இவருடைய கமிட்டியுடன் ஒத்துழைக்கமுடியாது என்று டாக்டர் அம்பேத்காரும் ஜனாப்ஜின்னாவும் கூறிவிட்டனர். இந்த இருமாபெருந்தலைவர்களின் ஆதரவின்றி, சப்ரூதயாரிக்கும்திட்டம், காலஞ்சென்ற பண்டிதமோதிலால்நேரு தயாரித்ததிட்டம், பிரிட்டனுக்குத்திரும்பிய சர். கிரிப்ஸ் தயாரித்ததிட்டம், ஆகியவைகள்போலக் கருவிலேசிதைந்ததாகிவிடும். சர். சப்ரூவின், முயற்சி, இப்படிச்சத்தற்றுப்போகிறதுகுறித்து அவர் கவலைப்படமாட்டார்; அவர்செய்யவேறு என்னவேலைஇருக்கிறதுபாபம், இதையும்செய்யாமல் அவ்வளவுபெரிய மனிதர் எப்படிச் சும்மாஇருப்பார்! ஆகவேதான் கருவிலே சிதைவதானாலும்கூட சிற்சில சமயத்திலே சப்ருகர்ப்பமாக இருப்பதிலே பெருமைகொள்கிறார்!

## படீல்பாணம்!

பம்பாய் தோழர் படீல்தமிழ்நாடுகாங்கிரஸ் தொண்டர் மாநாட்டிலே, பேசும்போது, ஜில்லாபோர்டு, முனிசிபாலிடிமுதலிய ஸ்தலஸ்தாபனங்களிலே, பூரணமெஜாரிடி இருந்தாலொழிய காங்கிரஸ்காரர்கள் நிர்வாகத்திலேஇருக்கக்கூடாதென்றும், நிர்வாகத்திலே இருக்கவேண்டுமென்பதற்காக வேறுகட்சிகளுடன்கூட்டும்கலப்பும், போரும்பாசமும்கொள்வது கூடாதென்றும்பேசிஇருக்கிறார். இம்முறைப்படி பார்த்தால், காங்கிரஸ்காரர் என்று தம்மைக்கூறிக்கொள்பவரும் காங்கிரஸ்காரர்களால் தம்மவர் என்று அழைக்கப்படுகிறவருமான, தோழர் ராதாகிருஷ்ணப்பிள்ளை அவர்கள், சென்னைமேயராக இருத்தல்கூடாது, ஏனெனில் அங்குகாங்கிரஸ் மெஜாரிடியில்இல்லை. அப்படிப் பட்டநிலைமையில் காங்கிரஸ்காரர்கள் ராஜிநாமாச்செய்துவிடவேண்டுமென்று தோழர் படீல் கூறியிருக்கிறார். இந்தக் கூட்டத்திலே, சென்னைமேயர் தோழர். ராதாகிருஷ்ணப்பிள்ளையும் பிரசன்னமாகஇருந்தார்; இன்றும் மேயராகவே இருக்கிறார்!! படீல்பாணம், பத்திரிகாலங்காரமேதவிர, வேறல்லஎன்பதைச் சொல்லாமற்சொல்லும் அன்பர் ராதாகிருஷ்ணன் அவர்களின்புகழ் ஓங்குக!!

## அரியலூரில்வால்ஆட்டம்!

அரியலூரில் நடைபெற்ற காங்கிரஸ்தொண்டர்கள் கூட்டத்திலே, தலையில்லை வால்ஆடிற்று என்று நாம்சொன்னால் தேசியவாதிகளுக்குக்கோபம்பொங்கும். ஆனால் காங்கிரஸை ஆதரிக்கும் இந்துஸ்தான் எனும்ஏடு, அரியலூரில்கூடிய கூட்டத்தின் போக்கைக்கண்டித்துச் சென்ற இதழிலே, எழுதியிருக்கிறது, தலைஇல்லை வால்ஆடிற்றுஎன்று! இராசகோபாலாச்சாரியாரை அழையாமல் அரியலூரிலே மாநாடுநடந்தது, இது சரியாஎன்றுகேட்கிறது இந்துஸ்தான். ஆனால் இதனைக் காரணமாகக்காட்டி அல்ல, வாலாட்டம் என்றவளமான அர்ச்சனையை அரியலூர்காரியத்துக்கு இந்துஸ்தான்அளித்தது. அங்கே, பொதுஉடைமைக்காரர்கள்மீது காங்கிரசார், பொச்செரிப்புடன் போரிட்டபோக்கையும், அந்தப்போக்கைக்கண்டித்துத் திண்டுக்கல் அப்துல்சத்தார்பேசமுயற்சித்தபோது, கலவரம்செய்து அவரைப்பேசவிடாமல்தடுத்ததையும் இந்துஸ்தான் எடுத்துக்காட்டி, இப்படிச்சேட்டைகள் நடந்தன அரியலூரிலே, தக்கதலைவர் இருந்திருந்தால் இந்தவாலாட்டம் நடந்திராதல்லவா என்றுவிசனிக்கிறது. தக்கதலைவர்கள் இல்லாததாலேதான் இந்த வாலாட்டம் நடைபெற்றதுஎன்று கூறுவதற்கில்லை, தலைவர்கள்கூடிய சூரத்காங்கிரசிலே சுதேசபறக்கும்குண்டுகளும் (கற்கள்)பாதக்குறடுகளும்பறந்த செய்தியை இந்துஸ்தான் மறந்துவிட்டிருக்குமா! தக்கதலைவர்கள் இருந்தபோதிலுங்கூடத், தகாதசெயல்களைச்செய்துதான் இருக்கின்றனர். சந்தர்ப்பபேதமல்ல அதற்குக்காரணம். பொதுஉடைமைக்காரர்களை ஓட ஓட அடித்தாலும் அவர்கள் காங்கிரசை விட்டுப் போகமாட்டார்கள் என்றசூட்சமத்தைத் தெரிந்துதான், அரியலூரிலே, பொதுஉடைமைக்காரர்களைச் சேர்த்துக் கொள்ள மறுத்தார்கள். கல்லென்றாலும் கணவன் புல் என்றாலும் புருஷன் என்ற தத்துவம் தெரிந்த தர்மபத்னியரல்லவா, பொதுஉடைமைக்காரர்கள், ஆகவே அவர்கள் அடித்தாலும் அணைத்தாலும் காங்கிரசைவிட்டுப்பிரியமாட்டார்கள் என்பது தெரிந்திருக்கிற காரணத்தால்தான், பொதுஉடைமைக்காரர்களைக் காங்கிரசார் மிரட்டுகிறார்கள். பாட்சி வீரர்கள் புலம்புகிறார்களே தவிர, ரோஷத்தைமட்டும் காணோம்.!!

இருந்து முகந்திருத்தி ஈரோடு பேன் வாங்கிவிட்டுப், பொதுஉடைமைக்காரர்கள்மாஸ்கோவிலிருந்துவந்ததுஎன்று உரைத்ததும் காங்கிரஸ்கிழவி, ஆடினாள்பாடினாள் ஆடிப்பழமுறத்தால் சாடினாள் ஓடோடத்தான், என்று இருக்கிறது காங்கிரஸ் பொதுஉடைமைக் கூட்டு! கண்போன கணவனைக் காகத்தைவிரட்டச்சொல்லிக் கைத்தடி கொடுத்துத் தெருத்திண்ணையிலே உட்காரவைத்துவிட்டுக், கள்ளப்புருடனுடன் ஊஞ்சலாடும் உத்தமி போன்

(10ம் பக்கம் பார்க்க)

# "அறிமுகப்படுத்துகிறேன்"

பாதன்.

"அடிபறை! கொட்டு முரசு! ஊது சங்கு! முழங்கு நாதசுரம்! கொண்டுவா பூர்ணகும்பம்! தெளிபன்னீர்! சூட்டுங்கள்புஷ்பஹாரம்! எடுங்கள் ஆர்த்தி! முகூர்த்தவேளை தவறுமுன் முடிசூட்டுங்கள்! ஜெயகோஷம் செய்யுங்கள்! மங்கள ஸ்நானம் செய்துவிட்டுப்பொன்னுடை உடுத்திப் பணிஅணியுடன் பவனிவரும் பார்த்திபனுக்குப்பராக்குக்கூறுங்கள்! பட்டத்தரசனாக அவர் இஷ்டப்பட்டுவிட்டார், இனிப்பயமில்லை துயரில்லை, வாழ்வுக்கு வளமில்லையே என்ற கிலியுமில்லை, அவர் வாயுரையேஓர்வரப்பிரசாதம், புன்னகையோ புதுவிருந்து, கைகுலுக்கினாலே மெய்சிலிர்க்கும்! மேதினி அறிந்த மேதாவி! மேலைநாடறிந்த அனுதாபி! அவரைப்பெறுவோம் அகமகிழ்வோம்! அயர்வுபோகும், ஆண்மைமிகும், இடர் ஒழியும், ஈடற்றபேறு கிடைக்கும்,உயர்வு மிகும், ஊக்கம்பிறக்கும், எங்கும்வெற்றி, ஏது நமக்கு இனிக்குறை, ஐயம் வேண்டாம், ஒன்றுபடுவோம், ஒட்டுவோம் பகையே, ஔவை மொழி எனக்கொள்வீர் இதனை, அஃதே நமது வழிஎன அறிவீர்!"—என்று இன்று பல்லாண்டு கூறிக்கொண்டு கிளம்பும் பலம்பொருந்திய கேசரிகளும்,பக்குவமுணரமறுக்கும் பகலவப்பார்வையாளர்களும், திக்குமுக்காடித் திசைக்கொருவராக ஓடிடும்நாள் இருப்பதைத்தெரிந்துகொள்ளாமல், திறந்த வாயிலிருந்துபிறந்தவைகளைத் திரு அருள்மொழிஎனக்கருதிக்கொண்டு திருவீதி வலம் வருகிறார்களே, சேற்றினைக் கரத்திலெடுத்து மேனியில் பூசிக்கொண்டு சந்தனவாடை மணக்குது பாரீர்என்று கூறித்திரிகிறார்களே, நல்ல மனிதர்களுக்கு ஏனோ இப்பொல்லாப் புத்திபிறந்தது, என்று துக்கம் மேலிட்டுத்தோழமை எனும் பாசம்மிகுந்து,என்னைச் சிலகூறிடத்தூண்ட, நான், கூற என்ன இருக்கிறது, அவர்கள் அறியாமையால் கூறுவதாக இருப்பின்உண்மையை அறையலாம். குறைமதியினராக இருப்பின் அதனை நிறையாக்கச்சில முதுமொழி பெய்யலாம், அப்படி அவர்கள் அறியாதார் அல்லவே அவர்களுக்குநான் கூறஎன்ன இருக்கிறது என்ற சோகம் மிகுந்திடவே, நிலைமையின் காரணமாக நெஞ்சுக்கு நஞ்சு புகுத்திக்கொண்டு, வஞ்சகவலையில் சிக்கி தர்பாரில் தஞ்சமடைந்த பஞ்சைகள்போல அவர்கள் ஆனார்களே என்று ஆயாசப்பட்டு, அவர்களை அவர்களே உணரவும், அவர்கள் முன்னாளில் பலர்க்கு உரைத்திட்ட அறிவுரையையே, அவர்கட்குநினைவூட்டி அவர்களை நல்வழியிலே சேர்த்துவைக்கவும் இன்று முயலுகிறேன். நோய் முற்றாதிருக்குமானால் இம்முறை பயன்படக்கூடும். முற்றிப்போயிருந்தால்வீரம் பூரம் தரத்தான்வேண்டும், அது பிறகு, இது முதலில்! வயிறுதாங்காஅளவுஉண்டு வலிகொண்டு புரளும் வைத்தியருக்கு, பிறர்வலிபோக்க அவர் வகையுடன்தயாரித்த மாத்திரைகளில் இரண்டொன்றை இழைத்துத்தரும், மருந்தரைக்கும் கூட்டாளிபோல இதைச் செய்கிறேன்,வைத்தியரின்வலிபோகச் செய்யும் இந்தஉதவிக்குக் கைமாறு எதிர்பார்க்கவில்லை, மாறாக நிந்தனையைத்தான் பெறுவோம் என்பதும் தெரியும், தெரிந்துமேஇதைச் செய்கிறேன், தெளிவு இல்லாததால் அல்ல, அவர்கள் எனது தோழர்கள் என்பதை இன்னமும் நான்மறவாததால்!

"பரதா! ஏன் பதைக்கிறாய்! பீடிகையைப்பலமாகப்போடுகிறாய்! என்ன சேதி? எவர்மீது தாவா?—என்று கேட்கத்துடிக்கும் தோழர்களுக்கு. சேலம் மாநாட்டின் எதிரொலியால் கிலிபிடித்துக்கொண்டு அலையும் சிலகதியிலிகள் உண்டே அவர்களுக்குக் கொடிபிடிக்கத் தமிழரின் படை நடத்துமளவு பலமும் பயிற்சியும் பெற்ற நமது நண்பர்களிலே சிலர், இசைந்தது கண்டால், கோபமும் சோகமும் மிகுந்திடாதா! புலிமீதுஎலி சவாரி செய்தால் எப்படி இருக்குமோ அதுபோலன்றோஇருக்கிறது புதுத் தலைவர்கள் என்போர் பழைய "ஜஸ்டிஸ் கட்சியின் குட்டையில் ஊறினமட்டை" என்று பெருமையுடன் விருதுகூறிக்கொண்டு வாழ்ந்த வீரர்களைப், பறை அடிக்கவும் கொடிபிடிக்கவும், பாதந்தாங்கவும் பராக்குக்கூறவும் பெற்றிருக்கும் விந்தை! எந்தச் சொக்குப்பொடியினால் எனதருமைச்சிங்கங்களுக்கு இந்தப் பங்கப்படும் நிலை உண்டாகிவிட்டதோ தெரியவில்லையே! ஏங்குதே என்மனம், தூங்குதே அவர்களின் ரோஷம், என்னேபரிதாபம்!! பெரியாரினால் விளைந்த பெருங்கேடுகளைய பெருமதியினர், பெரியஇடத்திலே கூடிப்பெரியதோர்முயற்சி செய்கிறார்கள்! இப்பெரியார்கள் செய்யும் பெருஞ்செயல் பலவும் சிறியராகிய நாம் சிந்தித்து வியாகூலமடையவேண்டிய விஷயமல்ல, அவர்கள் அதுவும் செய்வர், மேலும் செய்வர்; ஆனால் எதனையும் அரைத்தூக்கத்திலே செய்வர், ஆகவே ஆரம்பம் அடாணாவாகவும்,முடிவு முகாரியாகவுமே இருந்திடும். எனவே அதுபற்றிநாம் நினைத்திருக்கத் தேவையில்லை, ஆனால் அவர்களின் பேச்சை நம்பிப்பெருங்கேட்டினைத்தமக்குத்தாமே தேடிக்கொள்ளும் நண்பர்களை எண்ணியேநான் விசனிக்கிறேன்.

அரசனாக இருப்பதைவிட அரசர்களை அரசாட்சியிலே அமர்த்தும் ஆற்றலுள்ளவராக இருப்பது போற்றுதலைப் பெறும்வழி. பொன்மாளிகைபெறாப்போகபோக்கியத்திலே புரண்டுகொண்டு, "இந்தமன்னன், என் சிருஷ்டி, இவன் முடியைப்பெற்றது எனது திறமையினாலேதான்! முடியுடைமன்னன்என்கைப்பிடியிலேஇருக்கிறான்' என்றுபெருமையுடன் பேசிக்கொண்டு இருக்கவேண்டுமென்பதிலே சிலருக்குப் பிரேமைஉண்டு. ஒருசிலருக்கு அந்தநிலை கிடைப்பதும்உண்டு.! சிலசமயங்களிலே, தட்டுத்தூக்கும்தாதிக்குக்கூடத் தரணி ஆளும் வேந்தன் தாசனாவதுண்டு. ஒரு அதரம் அரசுகளை ஆக்கிடவும் அழித்திடவும் காரணமாக இருந்ததுண்டு. ஆனால் அந்தநிலை ஜொலிப்பதுபோலவே,ஆளைத் தீய்த்துவிடவும் காரணமாக இருந்திருக்கிறது. அரசாட்சியிலே ஒருவனை அமர்த்தும் ஆற்றல்பெற்றவன், அந்த அரசனாலேயே அழிக்கப்பட்டதுமுண்டு. அங்ஙனம் அழிக்கப்பட்டு அழுதவர் கதையை ஆள்தேடி ஆசனத்திலே அமர்த்த ஆவல்கொள்ளும் அன்பர்களுக்குக்கூற ஆசைப்படுகிறேன். ஆளைஇன்று தேடுவதன் பலன், நாளைக்குஅவர்தம் தாளின் கீழ்சிக்கி நசுக்குண்டு போவதாக இருக்குமே, இதனை அறியாது ஏன் இவர்கள் ஆள்தேடி அரசாக்கும் வேலையிலேஇறங்குகிறார்கள், பாவம். அந்தநாளிலே, அரசுக்கு ஆள் இல்லாவிட்டால், அரண்மனையானையிடம், மாலைகொடுத்து அனுப்புவராம், யானை ஊர்சுற்றுமாம், நாடுதிரியுமாம், எவனாவது ஒருவன் கழுத்திலே மாலையைப்போடுமாம், அவனை அரசனாகக் கொள்வராம் அந்நாட்டார். ஆனால் யானையின்உதவியாலேதானே அரசு பெற்றோம் என்று அந்தமன்னன் கரியின் காலைக்கும்பிட்டு வாழமாட்டான். சமயம் கிடைக்கும்போது, அதன்மீது அமர்ந்து அங்குசத்தால் அதனை அடக்குவான், வேற்று வேந்தனுடன் போரிடப்போகும் சமயத்திலே அதே வேழத்தின்உடல் வேறு தலை வேறாவதுமுண்டு. அரசு தேடிக்கொடுத்தாயிற்றே என்று அந்த யானைக்கு ஆலயம் கட்டுவதில்லை யாரும். அதுபோலத் தலைவர்பதவிக்கு இன்னவரைக்கொண்டு வரவேண்டும் என்று எண்ணமிட்டுக் கால்கடுக்கச் சுற்றினால் பலம் பின்னப்படுமே தவிர, பரிபாலனபீடத்திலே ஏறும் பாக்கியமோ,

(6ம் பக்கம் பார்க்க)

## 'அறிமுகப்படுத்துகிறேன்'

5-ம் பக்கத் தொடர்ச்சி

கடைசிவரை அடப்பந்தாங்கும் பதவியோகூட இருக்குமென்று கூறமுடியாது, ஆர்தேடிகள்பாடு அவ்வளவு ஆபத்தானது.

Warwick, The King-Maker, வேந்தரை உண்டாக்கும் வார்விக், என்றோர் வீணன்இருந்தான் ஆங்கிலநாட்டிலே முன்பு. ஆறும்என்றி என்பவனுக்கும் காலாம் எட்வர்டு என்பானுக்கும், பிரிட்டிஷ்ஆட்சி விஷயமாகப்போட்டி. இதிலேநுழைந்தான் வார்விக் சீமான். தனது ஆற்றலால் எட்வர்டுக்கு அரசு கிடைக்கச்செய்தான். அரசனுக்கும் ஆற்றல்படைத்தோன் என்ற அடைமொழி பெற்றுச்,சீமான்களின் சீராட்டுதலுக்கும் பாராட்டுதலுக்கும் மயங்கிக்கிடந்தான். வார்விக்கின் வசீகரவாழ்க்கை, கடைசிவரை விருந்தாகஇல்லை. எந்த எட்வர்டு அரசனுவதற்கு, வார்விக்கச்சையை வரிந்துகட்டிவேலைசெய்தானே அதே எட்வர்டு, பாய்ந்தான் வார்விக்மீது, வார்விக் 1470-ம் ஆண்டு, பிரான்சுக்கு ஓடினான்! முடிதரித்தமன்னன் என்பிடியிலேஇருக்கிறான் என்றுபெருமைபேசியவனுக்கு, இக்கதிகிடைத்தது. இச்சைதான் பொல்லாதநச்சரவாயிற்றே. அதன் கடியினால் விஷம்ஏறிப்போயிருந்த வார்விக், தனது அரசனுக்கும்வேலையைநிறுத்திக்கொள்ளவில்லை. ஆறும் என்றியின் மனைவி, மார்கரேட் எனும் மாது,பிரான்சுக்காரி, அவளை அடுததான், "உன்கணவனை மன்னனுக்குகிறேன்" என்று கூறினான். மீண்டும போர்மூண்டது, எட்வர்டுதோற்றான், என்றிபட்டத்துக்குவந்தான் "என்திறம் எப்படி!", என்று எக்காளமிட்டான் வார்விக்! இந்த வாழ்வு நிலைத்ததா? இல்லை! அடுத்த ஆண்டிலே ஆங்கிலநாட்டுக்குவந்தான்எட்வர்டு!போர் மீண்டும்! 1471-ம் ஆண்டு (Barnet) பார்னட் என்ற களத்திலே, வார்விக் கொல்லப்பட்டான், எட்வர்டு முடிதரித்துக்கொண்டான். அரசனுக்குவோன் பிணமானன், பார்னட்களத்திலே என்பதை அறிந்தவர், இந்த வீண்வேலையிலே ஈடுபட்டு வேதனை அடைவானேன் என்று விவேகம்பெற்றனர், அந்த நாட்டிலே. பித்தம்பிடித்தவன் என்றி, போர்ற்றல் படைத்தவன் எட்வர்டு, இருவரையும் மாறி மாறி ஆதரித்து, தனது ஆதரவால் தான் எவரும் அரசனுகமுடியும் என்ற எண்ணத்தை மதுவாகக்கொண்டவன் வார்விக். அந்த மது மதியைமயக்கிற்று, சீமானையும்மாய்த்தது. இன்று வார்விக் வேலையிலே ஈடுபடுகிறார்கள் நமது நண்பர்களிலே சிலர்! பரிதாபம்!! இங்கே இதுபோது பித்தம்பிடித்த என்றியும் இல்லை, பிடிகேட்கும் எட்வர்டும் இல்லை. என்றாலும்; தலைவராக்கும் திறமையைத்தம்மிடம் இருப்பதாகத் தவறுதக்கருதிக்கொண்டு சில வார்விக்குகள் கிளம்பிஇருக்கிறார்கள். அவர்களின்நோக்கம், பெரியார் அமர்ந்துள்ள பீடத்திலே சர். சண்முகத்தை அமரச்செய்யவேண்டுமென்பதாம்! பெரியார் அமர்ந்துள்ள பீடத்திலே, அவரைத்தள்ளிவிட்டு உட்கார, சர். சண்முகம் ஒப்புவாரா என்ற சந்தேகம் பிறக்கவே, அதற்கோர் யுக்தி செய்து, பெரியார் தமதுபீடத்தைக் காலிசெய்துவிட்டார், வேறுஇடம்போய்விட்டார், எனவே தலைவருக்காக ஒரு ஆசனம் தயாரில்இருக்கிறது, என்றுகூறி அழைக்கிறார்கள் சர். சண்முகத்தை! அவர் அதனை நம்புவதாகவும்தெரிகிறது! அவருக்கு வார்விக்வரலாறு தெரியும்!!

★

இந்தவிசித்திரக்கூட்டம்,கும்பலுக்கு இடங்கொடாத குணாளர்கள் கூட்டம், தெரியவில்லையா, அது தானய்யா, சேலத்திலே தமது வீரதீரகெம்பீர பராக்கிரமத்தைதக்காட்டி, நிபுணத்துவத்தை நீட்டி, ச. மக்களை ஓட்டி, கீர்த்தியை நிலைநாட்டிப் பெரியாரையும் அவருடைய தோழர்களையும் வாட்டி வதைத்து, வெற்றிக்கொடிபிடித்து, வீரத்தம்பட்ட மடித்து, விழாக்கொண்டாடிய வீராதிவீரர்கள் கூட்டம் இருக்கிறதே—இன்னமும் புரியவில்லையா, சரி; சரியாக விளக்குகிறேன், பட்டம்பதவி எனும் புண்யங்களை ஏற்கமறுக்கும் மாபாவிகளை முறியடித்த ஞாயிறு நோக்கிகள் உண்டல்லவா, அந்தக்கூட்டம் சென்னையிலே, பிப்ரவரியிலே மாநாடு போட்டு, மக்களை இரட்சிக்கப்போகிறார்களாம்!! விபூதியும் நாமமும் வேண்டிய மட்டும் போடலாம்! வேலும் சூலமும் வெள்ளிதங்கம்முதலிய எந்த உலோகத்திலும செய்துவைத்துக் கொள்ளலாம்! இராமஸ்வாமிஐயரை அந்தரங்கக்காரியதரிசியாகவைத்துக்கொண்டு ராஜேஸ்வரி சீனுவாசனைக்கொண்டு மகளுக்குப்பிடிலும், சீனுவாச ஐயரைக் கொண்டு மகனுக்குப்படிப்பும் சொல்லித்தர அமர்த்தலாம், இராமநவமி கொண்டாடி இரகுபதிராகவ ராஜாராம் பாடி, புரோகிதரின் திருப்பாதத்தைத்தலையிலே சூடி, மோட்சசாம்ராஜ்யத்திலே முதலிடம் தேடிக்கொள்ளலாம்! எதைச்செய்பவராக இருந்தாலும் ஏற்றுக்கொள்வார்கள்! கொள்கையை மேடைக்கும், வாழ்வுக்கு வளைவு நெளிவும் வைத்துக்கொண்டுள்ள வசீகரச் சீமான்களும், அவர்களின் புன்னகையிலே சொக்கிக்கிடந்து அங்கத்தை வளர்க்கப் பங்கப்படும் சிங்கங்களும், ஒன்றுகூடலாம்! ஆணும்பெண்ணும் அலியும் ஒன்றே, அவரவர் செய்கை எவரே கண்டார், என்பது சித்தாந்தம். வருவீர், வருவீர் என்று கூவுவர், எவரையும்! இவ்வளவு விரிந்த பரந்தமனப்பான்மையுடைய வித்தகர்கள் விமரிசையாகக்கூடி, புதியதலைவருக்கு முடிசூட்டி, கொடிவிரித்துக் கொட்டுமுழக்கடித்து, பவனி வரப்போகிறார்கள்!!

"காணக்கண் காட்சியே
கதியற்றோரின் மீட்சியே
காணக்கண் காட்சியே!
கண்டவுடன் கைதலுக்கி
கவனிப்பார் நேர்த்தியே,
கார்வீட்டு இறங்கியதும்
களைத்திடுவார் மூர்த்தியே
காணக்கண் காட்சியே!"

என்ற கீதத்தைப்பாட நாடு துடிக்கிறது! விரைவிலே இந்த வீரர் விழாவைக் காண ஆவலாக வெகுபேர் இருக்கிறார்கள்!

மாநாடு கூட்டுமுன்னம், இவர்கள், பெரியாருக்கு நாட்டிலே செல்வாக்கு உண்டா இல்லையா? என்பதுபற்றிவிவாதித்திட ஒரு அமைப்புக்கூட்டம் நடத்தினாராம். ஒரு தோழர் உரத்த குரலிலே சொன்னாராம், "செல்வாக்கு, மகா செல்வாக்கு! என்னய்யா இருக்கிறது நாயக்கருக்குச்செல்வாக்கு!! ஏதோ இந்த ஜனங்களிடம் செல்வாக்கு இருக்கிறது, அதனுல்என்ன!" என்று. பணசக்திக்கும் ஜனசக்திக்கும்போட்டிப் பந்தயம் நடத்தவும் இந்தப்பழையபசலிகள் நினைக்கின்றன, அவ்வளவு பரிதபிக்கக்கூடிய அளவு அவர்களின் மதி தேய்ந்திருக்கிறது. நிதி மிகுந்து மதி தேய்ந்திருக்கும் பேர்வழிகளின் கதி,யாதாகும் என்பதை ஏடுகளிலே அல்ல, நாடு சுற்றினாலேயே தெரிந்துகொள்ளலாம்! தெரிந்துகொள்ளவேண்டியதை விரைவாகத்தெரிந்து கொண்டால் அவர்கள் வேறுகாரியத்திலே ஈடுபடலாம், அதற்காகத்தான் அவர்கள் விரைவாக மகாநாட்டைக்கூட்டி விடவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். அந்த அவசரம் அவர்களுக்கும் இருந்துதீரும், யார்கண்டார்கள், இன்று ஏற்பட்டிருக்கும் "கூட்டு" எத்தனைநாள் நீடிக்குமோ? எந்தவிநாடி முறிந்துபோகுமோ! எனவேதான்கூட்டு உடையுமுன், குட்டு வெளிப்படுமுன், கூட்டிவிடுங்கள் மாநாட்டை, கேட்டு விடுங்கள் நாட்டுமக்கள் சொல்ல இருப்பதை, என்று அந்தக்கூட்டத்துக்குக் கூறுகிறேன், விட்டகுறை தொட்டகுறையின் காரணமாக!!

புதுத்தலைவரை,ப் புனருத்தாரணநோக்கத்துடன்தேடும் இந்தப் புனிதர்களின் போக்கு, மிகவேடிக்கையாகஇருக்கிறது. ஒருகட்சியின் தலைவர், சரியாகநடக்கவில்லையென்றால், அவரைநீக்குவதற்கு, அவருடன்போரிடவேண்டும், நேர்முகமாக! கட்சிப்போர்என்றால், காகூவல்ல, காகிதவேட்டல்ல, கல்வீச்சுமல்ல! கட்சியிலேபற்றுக்கொண்டவர்களின் மனதை மாற்றி, அவரைநீக்கும்படி பிரசாரம் செய்துஆதரவுதேடிக், கட்சியின் மாநாட்டிலேவந்திருந்து, அங்குவேறோர் தலைவரைத்தேர்ந்தெடுக்கவேண்டும். இதுவே முறை! ஒருமித்தகருத்திருப்பின், புதுத்

(7-ம் பக்கம் பார்க்க)

## 'அறிமுகப்படுத்துகிறேன்'

6-ம் பக்கத் தொடர்ச்சி.

தலைவரை, மாநாட்டுப்பந்தலிலே, ஏகோபித்த ஓட்டுகளால்தேர்ந்தெடுப்பதும், பிளவுபட்ட அபிப்பிராயம்இருப்பின்,ஓட்டுக்கணக்கெடுத்து. பெரும்பான்மையானஓட்டு யாருக்குக்கிடைக்கிறதோ அவரைத்தலைவராகக்கொள்வதும், நியாயம் நாணயம்! ஆனால் இவர்களின் நியாயம் இருக்கிறதே, அது மனுவும் மாந்தாதாவும் பொறாமைப்படக்கூடியது! இவர்கள் சொல்கிறார்கள், பெரியார் இப்போதுதலைவரல்ல, அவர்கட்சியின் அங்கத்தினரும்அல்ல, கட்சிக்கு இப்போது தலைவரேஇல்லை, ஆகவே புதிதாகத் தலைவரைத்தேர்ந்தெடுக்கப்போகிறோம்" என்று. பெரியார் விரட்டப்பட்டாரா? என்றுகேட்டால், "இல்லை, அவராகவே விலகிக்கொண்டார்" என்று கூறுகின்றனர். எப்போது? என்றுகேட்டால், சேலத்திலே மாநாடுநடந்ததே அன்று என்று கூறுகின்றனர். சேலத்திலேஅவர் தானேதலைமைவகித்தார்? ஆம்! போட்டி உண்டா? இல்லை! பூசல்எழுந்ததா? கிடையாது! அங்குஏதேனும் ஆட்சேபனையைக் கிளப்பினீர்களா? இல்லை! மாநாட்டிலே பெரியார், கட்சியைவிட்டுவிலகுவதாகச் சொன்னாரா? சொல்லவில்லை! அப்படியானால், அவர்இப்போது கட்சித்தலைவரல்ல என்று கூறுகிறீரே, அதுஎப்படிப் பொருந்தும் என்றுகேட்டால், அன்று கட்சியின்பெயரைமாற்றிவிட்டார், அதனால்கட்சியை இழந்துவிட்டார் என்று கூறுகிறார்கள், கீல்பாக்கத்துக்குள்ளே இருந்தல்ல; வெளியேஉலவிக்கொண்டே!

இவர்களின் போக்கைக் குடிஅரசு கண்டிக்க ஆரம்பித்ததும், கட்சியின்கறை போக்கப்புதுத்தலைவர் வருகிறார்என்றும், பெரியாரின் போக்கினாலேயே கட்சி கெட்டுவிட்டது என்றும், கட்சியின் தளபதிகள் பலர் ஒதுங்கிவிட்டதே பெரியார் போக்கின் பயனாகத்தான் என்றும், கூறிக்கவாத்துப் பழகுகிறார்கள். யாரை இவர்கள் தலைவராக்கி, எந்தெந்தத் தளபதிகளின் மேற்பார்வையின் கீழ், கட்சியைப் புனிதப்படுத்தி, அதனை ஓர் மகத்தான கட்சியாகச் செய்யப்போவதாகக் கூறுகிறார்களோ, அவர்களிடம் கட்சி, இருந்தது முன்பு. அந்த நேரத்திலே கட்சியிலே இருந்ததுஎன்ன? தலைவர்களென்போரின் போக்கு எவ்வண்ணம் இருந்தது? நடவடிக்கைகள் எத்தகைய இலட்சணத்திலே இருந்தன? தொண்டர்களின் நிலைமையாது? பொதுமக்களிடம் தொடர்பு உண்டா? பிரசாரம் உண்டா? அரசியல் விபசாரம் எந்த அளவிலே இருந்தது? என்பனபோன்றவைகளை எண்ணிப்பார்த்தால், கட்சியைப்பெரியாரே வேண்டாமென்று சொல்லிவிட்டுவிட்டாலும், மறுபடியும், "அந்த மகானுபாவர்களிடம்" கொண்டுபோய்ச்சேர்ப்பது, மாபாதகம் என்பதை, மனம்கூறும், இனப்பண்பு அறிவுறுத்தும், ஆனால் நேசர்களும், பகலவப்பார்வையாளர்களும், பிடிவாதமாகக் குருட்டுப்போக்கிலேயேசெல்லுவது என்று தீர்மானித்துவிட்டனர், அவர்களின் விழிதிறக்க நான் கூறக்கூடியது, மணிமொழி, என்மொழியல்ல. அவர்கள் நல்ல நினைப்போடுஇருந்தபோது நமக்கெல்லாம் கூறியதைததான் நான் அவர்களின் நினைப்புகெட்டிருக்கிற நேரத்திலே கவனத்திற்குக் கொண்டு வருகிறேன், நட்புமுறை காரணமாக.

ஜஸ்டிஸ்கட்சியிலே"ஒண்டவந்தபிடாரி ஊர்ப்பிடாரியை ஓட்டப்பார்த்தது"— "ஜஸ்டிஸ்கட்சியின் பீடை தொலைந்தது" —"ஜஸ்டிஸ் கட்சியை எதிர்த்துப்பழித்தும் அடுத்துக்கெடுத்தும் வந்தவர் ஒழிந்தார்"—இவைபோன்ற வாசகங்களை, எழுதவும், தங்கள் பேனாமுனைகள் பயன்படவேண்டியஅளவு இழிநிலை ஏற்படும் என்று அவர்கள்எண்ணியிருக்கமாட்டார்கள். கண்சிமிட்டிக்காலந்தள்ளும் காரிகைக்கு, விடுதிபுகும்வரை, விபசாரந்திர வேறுவகையில்லைஎன்பது தெரியாமல் இருப்பதுபோல! இன்று, ஜஸ்டிஸ் கட்சியின்ஒண்டவந்தபிடாரியாகவும்,சனியனாகவும், பீடையாகவும் பெரியார் இவர்களின்கண்களுக்குத்தோன்றுகிறார். அதுபெரியாரின் குற்றமல்ல, வெறியனின் விழிக்குத்தந்தைகூட, தாக்கவருபவன்போலத்தான் தெரியுமாம்! இந்த முறையிலே பெரியாரைத்தூற்றுவதன் மூலம், புதுஇடத்திலே புன்னகையைப் பெறவிரும்புகிறார்கள்போலும்! புதுஇடங்களிலும், இப்படிப் பெரியாரைச்சிலர் தூற்றுவதுகேட்டு, இதுதமிழ் இசையைவிட இனிமையாக இருக்கிறது என்று எண்ணப்படுகிறதுபோலும்! நிந்தனையைச்சிந்துஎன்று ஏற்றுக்கொள்ளும் செவியினரை, நேர்மையாளர்கள் என்று கூற அறிவாளர் மறுப்பர்!

எத்தகைய தலைவர்களை ஏத்திஏத்தித் தொழுவோம்யாமே—என்று இன்று பாடுகிறார்களோ, அதே தலைவர்களிடம், ஜஸ்டிஸ்கட்சி ஒப்படைக்கப்பட்டிருந்தது ஒருகாலத்தில். அதனால் பயன்பெற்ற பூமான்களும் சீமான்களும், கட்சியை மறந்து கொள்கையைஇகழ்ந்து, வாழ்வு ஒன்றையேபெரிதெனமதித்துத், தொண்டர்கள் துயருறப், பொதுமக்கள்திகைக்க, எதிர்க்கட்சியினர் ஏளனம்செய்ய, இவை ஏதுவும் எம்மை ஏதும்செய்யாது என்று இறுமாந்துகூறிக்கொண்டிருந்தனர்முன்னாளில். அந்தநேரத்திலே, பெரியாரும் அவருடைய தோழர்களும், (அந்தத்தோழர்கள் கூட்டத்திலே இருந்தவர்கள்தான், இன்றையஜஸ்டிஸ்டாஸ்கள்)—கரைந்துபோகும்கட்சிக்குக்காப்பளிக்க முன்வந்தனர். அந்தத்தொடர்பு, பிறகு, தலைமைப்பதவியைப்பெரியாருக்கு அளித்தது. [illegible] ஆனால், பெரியார், பொப்பிலியிடம் தவங்கிடந்த தலைமைப்பதவியைப் பெற்றதாகவும், பெற்றபிறகு அதனைத் தமது பிடியிலே இறுக்கிப்பிறருக்கு இடமின்றிச்செய்து கெடுத்ததாகவும், இனி அவரைஒழித்துப், புதுத்தலைவரைப்பிடித்து அவர்மூலம்கட்சியின் கொடியை வான்முகடுவரைஉயர்த்தப்போவதாகவும் கூறுகிறார்கள். இதிலே பிரதானபுருஷராக, பிரதிஷ்டாமூர்த்தியாக, புனருத்தாரண கர்த்தாவாக, சர். சண்முகத்தை இருக்கச்செய்யப்போகிறார்களாம். எந்தச்சண்முகத்தை?

இதோஓர் படத்திறப்புவிழா! பெரியாரால்அழுக்காக்கப்பட்டபீடத்தைத்,தமது சேவைஎனும் அபிஷேகத்தால்பரிசுத்தப்படுத்தப்போவதாகப் ,பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சர். சண்முகத்தை, மக்கள் காணவேண்டாமா, அதற்காக இந்தப் படத்திறப்புவிழா!!

"இப்போது கொச்சி திவானாகஇருக்கிறாரே சர். சண்முகம் செட்டியார், அவரைஎடுத்துக்கொள்ளுங்கள் (ஏன் விழிக்கிறீர்கள்? அவர் விஷயத்தில்கூடக்குற்றம் கண்டுபிடிக்கவந்துவிட்டேனே என்பதுதானே உங்கள் முகமாற்றத்தின்காரணம்?) பாவம், அவர்மீதுதப்பு இல்லைதான். பொதுவாழ்க்கையில் ஈடுபட்டதிலிருந்து அவரது சொந்தப்பெட்டியிலிருந்து சல்லிக்காசுகூட எடுத்துச்செலவு செய்து பழக்கமில்லை. மாகாணசட்டசபை மெம்பர், மந்திரிக்குக்காரியதரிசி, இந்தியாசட்டசபை மெம்பர், இந்தியசட்டசபைடிப்டிபிரசிடெண்ட், இந்தியசட்டசபைத்தலைவர், ஆஸ்திரேலியா பிரயாணம், ஜினிவாபிரயாணம், ஒட்டவா பிரயாணம்! அப்புறம் வேறுஎன்னவேண்டும்? இவ்வளவுக்கும்படிச்செலவுசர்க்கார் மூலம் பொதுக்காசு! இப்படிஇருந்தவர், ஒருவருமானமுமில்லாமல் கையைக்கட்டிக்கொண்டு,குடும்பச்சொத்தைத்தின்றுகொண்டிருக்க மனம்வருமா? அதனால்தான் அவரது அதிர்ஷ்டதேவதைஅசெம்பிளி எலக்ஷனில் தோல்வியைஉண்டாக்கிக்,கொச்சித்திவானாகத் தூக்கிவைத்துவிட்டது.

இப்படி இவர்திவானாகப் போனது தான் கட்சிவிஷயத்தில் மகாமோசமாகப் போய்விட்டது. கூட்டல், பெருக்கல், கழித்தல் வாய்ப்பாடுகணக்குப்போட்டுப் பார்த்தால் சர். சண்முகம் செட்டியார், கொச்சிசமஸ்தான திவான்பதவியிலிருப்பது, நம்முடைய மனுஷாளும்ஒருஉயர்ந்தபதவியிலிருக்கிறார் என்று பெருமையடித்துக்கொள்ள சந்தர்ப்பங்கிடைத்ததைத்தவிர அவர் அந்த உத்யோகத்துக்குப்போனது கட்சிக்குப் பெரிய நஷ்டமாகும். நம்மைப்போன்றவர்கள் இப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் உத்யோகம் கிடைக்காதபடி விஷமக்கிளர்ச்சி செய்தால்தான் இனிக்கட்சிக்கு க்ஷேமமுண்

(8-ம் பக்கம் பார்க்க)

## 'அறிமுகப்படுத்துகிறேன்'

7-ம் பக்கத் தொடர்ச்சி.

டாகுமென்பதைச்சர். சண்முகம்நிரூபித்துவிட்டார்.''

தலைவராக்கப்படவேண்டிய சர். சண்முகத்தின் உருவப்படத்திறப்பு விழா நடந்தேறிவிட்டது. பணத்திலேஅக்கரை, பதவிமேல் பதவிபெறும் வழக்கம், பதவி பெற்றதும் கட்சியை மறக்கும்பண்பு, இத்தகைய அலங்காரபூஷிதர், அருமைத் தலைவர் சர். சண்முகம்.

சரி, உருவப்படத்தைத்தீட்டியதுயார் பாதா! என்றுகேட்கிறீர்களா? நான்தீட்டுவேனு! நம்மைச் சண்முகம்மறந்தாலும் துறந்தாலும், நாம் சண்முகத்தைப்பழிப்போமா? நானல்ல தோழர்களே, படத்தைத்தீட்டியவன். நகாதூதன் பத்திரிகையிலே "கேசரி" என்ற புனைபெயருடையார், பேனுநர்த்தனம் என்றதலைப்பிலே 19-4-36லே, தீட்டியஉருவப்படம் இது. எந்த நகாதூதன், எந்தக்கேசரி, இப்போது, பெரியாரைப்பீடை என்று கருதிஎழுதும் நகாதூதனு, குடிஅரசு நிருபரின் ஈனத்தனம் என்று கண்டித்துஎழுதும் கேசரியா; என்று கேட்கிறீர்கள். சாக்ஷாத் அதேகேசரிதான், அதேதூதன் தான்! அன்று, சுயமரியாதைத்தூதனுக இருந்ததுபோய், இன்று சுகமரியாதை தேடுவோரின் தூதனுக வந்திருக்கிறார், என்னல் அண்ணனென்று அன்புடன் அழைக்கப்படவேண்டிய இடத்திலே இருந்த கேசரி!

எந்தக்கேசரிக்கு எந்தச்சண்முகம் ஓர் சுயநலக்காரராகத்தோன்றினுரோ, அதே கேசரிக்கு, அதே சண்முகம், "துஷ்டநிக்ரஹசிஷ்டபரிபாலனுர்த்தம்" ஜஸ்டிஸ் கட்சித்தலைவர்எனும்புதியஅவதாரமெடுக்கப்போகும் புண்யமூர்த்தியாகக்காணப்படுகிறார். நாம் அன்றும் சர். சண்முகத்தைக்கண்டித்ததில்லை, இன்றும் அவரை புனருத்தாரணத்தலைவராக அவதரிக்கக் கூறவில்லை. சர். சண்முகத்தைத்தலைவராக்குமுன்னம், கேசரி, எந்தச் சண்முகத்தைத்தலைவராக்குகிறோம் என்பதைத் தெரிந்துகொள்வதும், சர். சண்முகம் தலைவராவதற்குமுன்பு, எந்தவிதமான தோழர்களின் முயற்சியால்தலைமையைப் பெறுகிறோம் என்பதை உணருவதும், இருசாராருக்கும் நல்லது. எனவேதான் நாம், சர். சண்முகத்துக்குக் கேசரியை அறிமுகப்படுத்திவைக்கிறோம்!,

"நகாதூதன்" ஆசிரியர் நண்பர் அழகுமலை அண்ணல் (திருமலைசாமி) பீபிள்ஸ் பார்ட்டிஎன்னும் ஜனநாயகக்கட்சியிலே இருந்தாரே, அந்நேரத்திலே, ஜஸ்டிஸ் கட்சியைக்கண்டிக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகி, ஒருவேளை இதுபோலச்சண்முகத்தைச் சாடினுரோ என்று சந்தேகிக்கிறீர்களா? அந்தச் சந்தேகம் வேண்டாம். இது "நகாதூதன்" ஜஸ்டிஸ் கட்சியின் ஆதரவாளனுக இருந்து கொண்டிருக்கையிலே, "ஜஸ்டிஸ் கட்சி உருப்படுமா" என்றதலைப்பிலே, கேசரி தீட்டியகாரசாரமானகட்டுரையிலேகாணக்கிடப்பதுதான், என்கைச்சரக்கல்ல, அவ்வளவு கரைபிடித்ததல்ல என்கரம்!

கேசரிக்கு ஏதோகோபம்போலும் சர். சண்முகத்தின்மீதுதனிப்பட்ட முறையில், அதனுல்தான் உருவப்படத்தை இப்படித்தீட்டினுர் என்று சமாதானப்படுத்திக்கொள்வதற்கில்லை. சர். சண்முகத்தை மட்டுமல்ல, பேனுநர்த்தனமேடையிலே நாம்காண்பது. ஜஸ்டிஸ்கட்சித் தலைவர்கள் சகலரும்இழுத்துவந்து நிறுத்திவைக்கப்படுகிறார்கள், நண்பர் கேசரியால். இதோ (இன்றுசர்) திவான்பகதூர் இராமசாமிமுதலியார், காணுங்கள்!

'திவான்பகதூர் எ. இராமசாமிமுதலியாரோ, மகாசுயநலக்காரப்பேர்வழி, கட்சியின் அஸ்திவாரம் "தான்" என்பது அவரதுநினைப்பு. பிராமணரல்லாதார் சமூகத்தில் தன்னைவிடப்பேச்சிலும் எழுத்திலும் கெட்டிக்காரர்கள் இருக்கப்படாதுஎன்பது அவரதுகவலை. அப்படி இருப்பவர்களையும் அழுத்திவைப்பதிலே அப்படிப்பட்டவர்களுக்கு "ஜஸ்டிசில்" விளம்பரம் அளிக்கப்படாமல்பாதுகாப்பதிலும்ரொம்பதிருஷ்டி! இது ஏன்? வேறுஒன்றுக்குமல்ல. அப்படிப்பட்டவர்கள்மீது ஊரார் "கண்திருஷ்டி" விழுந்துவிடக்கூடாது என்கிற கவலைதான்! வெளியூரிலிருந்துவருகிற கட்சித்தலைவர்களுடனும் அபிமானிகளுடனும் அளவளாவிப்பேசுவதற்கு அவருக்குலேசில் மனம்வாராது. காரணம், வெட்கம்என்றோ கூச்சம்என்றோ நினைக்காதீர்கள். அவரதுகர்வம் அது.

இப்படிப்பட்ட மண்டைக்கர்விகளும் ஜஸ்டிஸ்கட்சித்தலைவர் ஜாப்தாவில் சேர்ந்தவர்களென்றால், கட்சிஉருப்படுமா? உருக்குலையுமா? என்றுகேட்கிறேன்''

இந்தப்படத்திறப்புவிழாவை அன்று நடத்திய "கேசரி"யின் துணைகொண்டுதான் பெரியாரைஒழித்து, புதுத்தலைவரை அமர்த்துவிக்கும் புனிதகைங்கரியத்துக்கு வரவேற்புக்கழகத் தலைவராக இருக்க, திருவாளர். எ. துரைசாமி முதலியார் இசைந்திருக்கிறாராம். "சுயநலக்காரர்" "மண்டைக்கர்வம்பிடித்த" "பிறரை அழுத்திவைக்கும்" இராமசாமியின், மூத்தவர்தான் துரைசாமியார், அண்ணன்தம்பி சண்டையுமில்லை, ஆனுலும், இந்தக் கேசரியின் காரியத்துக்கு இதேதுரைசாமியார் உடந்தை! எப்படி இருக்கிறது கூட்டுவாழ்க்கை! கேசரியை நான் துரைசாமி முதலியாருக்கு அறிமுகம்செய்துவைப்பது தவறு!

இவ்வளவோடு நிற்கவில்லை ஜஸ்டிஸ் தலைவர்களைப்பற்றிய கேசரியின் குறிப்புகள். இதோவருகிறார் சர். பி. டி ராஜன், அவரையும்பாருங்கள்.

"மற்றொரு தலைவரான கனம் பி. டி. இராஜன் அவர்களைப்பற்றியோ சொல்லவேண்டியதில்லை. இவரைச்சிலர் சாமியார் என்றுகூடச்சொல்ல முன்வந்துவிட்டார்கள். காலையில் 10, 11 மணிவரையில் நித்திராதேவி கனம். இராஜன் அவர்களை வெளியில்போக அனுமதிப்பதில்லை. பகல் 1 மணிக்குக்கூடபேட்டி நடக்கும். அப்படியிருந்தால்வந்தவர்களின் வயிறு என்னவாகும்? இரண்டாவது மந்திரியும் தமிழ்நாட்டுத் தலைவராயும்இருப்பவர் இப்படிப் பகலையிரவாகவும் இரவைப் பகலாகவும் உபயோகித்துவருகிறார். கட்சிவிஷயமாகவும், உத்யோக தோரணையிலும் கனம்மந்திரியைப்பார்த்துப்பேசவருகிறவர்கள் சர்வஜாக்கிரதையாக முன்கூட்டியே லீவ் எடுத்துக் கொண்டுவந்தால்தான் பேட்டிகித்திக்கும். இதனுல் எத்தனையோபேர் மனமுடையநேருகிறதென்பது அவரால் அறிந்துகொள்ளமுடியவில்லை."

இப்படி இராஜனைத் தீட்டியகேசரி கோஷ்டியார்தான் அதே சர். பி. டி. இராஜன் தங்களோடு இருக்கிறாரென்று பூரிக்கிறார்கள். கோகலேஹாலில் நடைபெற்ற புனரமைப்புக்கூட்டத்திலே சர். பி. டி. இராஜன் பிரசன்னமாக இருந்தாரென்று பெருமைபேசிக்கொள்கிறார்கள். சர். பி. டி. இராஜன், கேசரி பாஷையில் கூறவேண்டுமானுல் காலை 11-மணிவரை நித்ராதேவியோடு இருப்பவர், பெரியாரால் கெடுத்துவிடப்பட்ட கட்சியைச் சீராக்கமுடியுமென்று அன்று சீறிஎழுதியகேசரிசெப்புகிறாரா, அன்று தன்னை இவ்வளவு அலங்கோலப்படுத்திக் காட்டிய கேசரிக்கூட்டத்தின் கூட்டுறவு தமக்குப் பெருமையளிக்கக்கூடியதென்று சர். பி. டி. ராஜன் கருதுகிறாரா என்பதை அறிந்துகொள்ளத்தான், இவர்களை அறிமுகப்படுத்திவைக்கிறேன். இனி மற்றொரு தலைவர் (மறைந்துபோன) குமாரசாமி ரெட்டியார் கொலு வீற்றிருக்கும் காட்சியைக் கேசரி கூறக்கேளுங்கள்.

"மூன்றாவது மந்திரியான திவான்பகதூர் குமாரசாமி ரெட்டியார் பேட்டி அவ்வளவு கெடுபிடியாகவும் பிரயோஜனகரமாயும் இராதென்பது அனுபவித்தவர்களால் சொல்லும் வார்த்தை. இவரது வாசஸ்தலமே ஒரு சிறுவிவசாயகழனி. ஓய்ந்தநேரத்தைப் பேட்டிக்கு விருதாவாகச் செலவிடுவதை டொமேட்டோ, முள்ளங்கி, கீரை, நூல்கோல் முதலிய இங்கிலீஷ் வெஜிட்டபில்ஸ்களைப் பயிர் செய்வதில் கழிக்கிறாராம். தவிர, எந்தத் தொழிற்சாலையில் இரும்புப் பெட்டிகள் கெட்டியாகவும் விலை குறைவாகவும்தயாரிக்கப்படுகிறதென்று புள்ளிபோட்டு

B-பக்கம் பார்க்க.

# பிள்ளையும் - பெண்ணும்

ஈழத்தடிகள். பி. ஏ.

இனிச், சம்பந்தர், பிறந்து பெயர் சூட்டப்பெற்ற வரலாற்றினை ஆராய்வாம். சிவபாதவிருதயருக்கும் பகவதியாருக்கும் பிறந்த குழந்தைக்குப், 'பிள்ளை' என்ற பெயர் முதற்கண் சூட்டப்பெற்றுப், பிள்ளையார் என்று தாய் தந்தையராலும் பிறராலும் அழைக்கப்பட்டது. 'பிள்ளை' என்பதை இத்தமிழ் நாட்டவர் ஆண்பிள்ளைகளுக்கே உரிமையாக்கி வழங்கி வருதல் கண்கூடு. இவ்வழக்கம் சம்பந்தருக்குப், 'பிள்ளை' என்ற பெயர் சூட்டப்பெற்ற காலத்திற்குப் பின்னரோ அல்லது அவர் காலத்திற்கும் முற்பட்டதோ என்பது சரியாகத் தெரியவில்லை. அது எப்படியிருந்தபோதிலும், 'பிள்ளை' என்ற பொதுப்பெயரை ஆணுக்குமட்டும் உரிமையாக்கி வழங்கும் முறையை மிகவும் கொடியதென்றே கூறவேண்டும். ஏனென்றால், 'பிள்ளை' என்ற சொல் ஆண் பெண் ஆகிய இருபாலாருக்கும் உரிமையான ஒரு பொதுச் சொல்லாகுமேயன்றி, ஆணைமட்டும் குறித்து நிற்பதாகாது. 'பிள்ளை' என்ற சொல் ஆணை மட்டுமே குறிக்குமென்றால், பெண்ணுக்கும் அதுபோன்ற ஒருசொல்...அமைதல் வேண்டும். ஆணை, ஆண்பிள்ளை யென்று அழைக்கும்போது, பெண்ணைப், பெண் பிள்ளையென்று அழைத்தலே முறை. அங்ஙனமன்றி, ஆணுக்குமட்டும் பிள்ளைப்பட்டம் கொடுத்துப், பெண்ணைத் தனித்து நிற்கவிடுவது முறையாகாது. பெண்ணைப், 'பெண்' என்றே அழைப்பதாயின், ஆணையும் 'ஆண்' என்றே அழைத்தல் வேண்டும். மற்று, ஆணுக்குப் பிள்ளைப்பட்டம் கொடுப்பதானது, பெண்ணைமக்களினத்திற்சேராது இழிவுபடுத்தும் ஒருகொடிய செயலாகும்.

ஒரு பெண்பிள்ளைக்கோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பெண்பிள்ளைகளுக்கோ தந்தையாக இருக்கும் ஒருவரை நோக்கி, 'உமக்குப் பிள்ளைகள் உண்டா' என்று கேட்டால், அவர், 'எனக்குப் பிள்ளையே கிடையாது' என்றவிடையையே தருகிறார். இவ்வழக்கம் இத்தமிழ் நாட்டைத் தவிர வேறெந்நாட்டிலும் கிடையாது. பிள்ளைகள் உண்டா என்று ஒருவரைக்கேட்கும் கேள்வி, மற்றை நாடுகளிலெல்லாம் பொதுவாகவே கேட்கப்பட்டுப் பொதுவாகவே விடையும் இறுக்கப்படுகின்றது. அதாவது, இத்தனை ஆண் இத்தனை பெண் உண்டென்றவிடையே, 'பிள்ளைகள் உண்டா' என்ற கேள்விக்குத் தரப்படுகின்றது. ஒன்று அல்லது ஒன்றுக்குமேற்பட்ட பெண்பிள்ளைகளுக்குத் தந்தையாகவுள்ள ஒருவன், எனக்குப் பிள்ளையே கிடையாது என்று இத்தமிழ் நாட்டைத்தவிர வேறெந்நாட்டிலும் துணிந்துகூறவேமாட்டான். அன்றியும், ஒரு ஆணுக்கும், நாலைந்து பெண்களுக்கும் தந்தையாகவுள்ள ஒருவரை நோக்கி, உமக்கு எத்தனை பிள்ளைகள்? என்று கேட்டால், 'எனக்கு ஒரே ஒரு பிள்ளை தான்' என்ற விடையே தரப்படுகின்றது. எங்கே? அணிலை அணிற்பிள்ளை யென்றும்; கிளியைக், கிளிப்பிள்ளையென்றும், கீரியைக், கீரிப்பிள்ளையென்றும், தென்னையைத், தென்னம்பிள்ளையென்றும்; கமுகைக், கமுகம்பிள்ளையென்றும் அழைக்கும் பரந்த நோக்கங்கொண்ட இத்தமிழ் நாட்டில்தான்—பிள்ளைத்தமிழ் பாடிய பெரும்புலவர்கள் வாழ்ந்த இத்தமிழ்நாட்டில்தான், ஆணைப் 'பிள்ளை' என்றும், பெண்ணைக், 'குட்டி' என்றும் அழைக்கும் வழக்கம் இருந்துவருகிறது. இத்தமிழ் நாட்டவர், ஒருவரை ஒருவர் நலம் உசாவும்போது, "உமக்குப் 'பிள்ளை'—'குட்டி' உண்டா" என்ற கேள்வியும் அதனுள் அடங்க உசாவப்படுகின்றது. 'பிள்ளை' என்பது ஆணையும், 'குட்டி' என்பது பெண்ணையும் குறிப்பிடுவதே அக்கேள்வியின் குறிப்பாகும்.

யானைக்குட்டி, குதிரைக்குட்டி, நாய்க்குட்டி, பூனைக்குட்டி, ஆட்டுக்குட்டி, என விலங்குகளை அவற்றின் சிறுபருவத்தில் அழைப்பதுபோல, மக்களினப் பெண்களையும் 'குட்டி' என்றே அழைப்பது இத்தமிழ்நாட்டின் வழக்கமாக இருக்கிறது. விலங்குகள்கூட, பால் வேற்றுமை காட்டாது, அதாவது ஆண் பெண் என்ற வேறுபாடின்றி இரண்டுமே 'குட்டி' என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன. விலங்கினத்திற்குத் தரும் மதிப்பும் பெருமையும் மக்களினப் பெண்களுக்குத் தரப்படுவதில்லை, ஒரு யானை, அது ஆணாய் இருந்தாலும் சரி, பெண்ணாய் இருந்தாலும் சரி, அதன் சிறுபருவத்தில் அது 'குட்டி' என்றே அழைக்கப்படுகின்றது. ஆனால், மக்களினத்திற்கு இந்த ஏற்பாடு கிடையாது. மக்களில் பெண்கள், விலங்குகளிலும் கீழாகவே இங்கு மதிக்கப்படுகின்றனர். கீழாக மதிக்கப்படுவது மட்டுமல்ல, மிகவும் இழிவான முறையில்பொருள் கொள்ளக்கூடியதாகவே பெண்களின் நிலையை அமைத்துள்ளனர். அதாவது, இத்தமிழ் நாட்டிற்சில பகுதிகளில் வாழ்பவர்கள், ஒருவரை யொருவர் பார்த்து நலம் உசாவும்போது, "உனக்குப்பிறந்தது எத்தனை? ஊராருக்குப் பிறந்தது எத்தனை?" என்று கேட்பார்களாம், இதில், உமக்குப் பிறந்தது எத்தனை என்பது ஆண்களையும்; ஊராருக்குப் பிறந்தது எத்தனை என்பது பெண்களையும் குறிக்குமாம். அதாவது, ஆண், தாய் தந்தையருக்குச் சொந்தமாகப்பிறந்த வீட்டிலேயே இருப்பான் என்றும், பெண், தாய் தந்தையரைவிட்டு வேறு அயல்வீட்டுக்குச் சொந்தமாகப்போய்விடுவாள் என்பதும் இதன் பொருளாம். பிறந்தகத்தை விட்டு வெளியேறுங் காரணத்தை வைத்துப் பெண்களை "ஊராருக்குப் பிறந்தவர்கள்" என்றுதானா அழைக்கவேண்டும்? இதற்கு வேறுசொற்கள் தமிழில் கிடையாதா? 'ஊராருக்குப் பிறந்தவர்கள்' என்ற சொற்றொடரை, வேறு மொழிகளைப் பேசுவோர், தங்கள் மொழியில் மொழி பெயர்த்து அச்சொற்றொடருக்குப் பொருள்கொள்ளும்போது, அவர்களுக்கு அச்சொற்றொடர் இவர்கள் கருதும் பொருளையே தருமா? அல்லது பிறப்பு முறையில் ஐயப்பாடு தோன்றக் கூடிய முறையில் பொருள் தருமா என்பதனை எண்ணும்போதுதான், தமிழர்களின் நாகரிகம்—பண்பு—பழக்கவழக்கங்கள் ஆகிய நல்லியல்புகள் எல்லாம் ஆரியமதக்கோட்பாடுகளினால் எவ்வளவு தொலைவு கீழ்நிலை அடைந்துள்ளன வென்பது நன்கு புலப்படுகின்றது. இது மட்டுமல்ல, மதக்கோட்பாடுகள் நம்மிடையேவந்து புகுந்ததன்காரணமாகத்தான், தமிழ்மொழி, தன் இனிமையும்-செம்மையும்—தெளிவும்கெட்டுச் சொல்லொன்றுகூறிப் பொருளொன்றுவிரிக்கும்முறையில் சீரழியும் நிலைமைக்கும் ஆளாயிற்று. மதத்துறைபற்றிக்கூறப்படும் கருத்துக்களைவிளக்குஞ்சொற்கள் தமிழ் மொழியில்வந்து கலந்தமையால்தான், தமிழும் தமிழ்மக்களும் தனித்துவாழும் உரிமையை இழந்தவராயினர். மதத்துறைபற்றிய மதிமயக்கும் கருத்துக்கள் நம்மிடையேபுகுத்தப்பட்டதால்தான், தலைவன்—தலைவி என்று ஆணையும் பெண்ணையும் சரிநிகர் நிலையில்வைத்து அழைக்கப்பட்ட பழம்பெரும் பண்பு மாறி, ஆண் அரியாசனத்திற்கும், பெண் அடுப்பங்கரைக்கும் தள்ளப்பட்டனர்.

எனவே, பிறப்பில்-வாழ்க்கையில்-பண்பில்-அறிவில் ஆண் பெண் ஆகிய இருசாராரும் சரிநிகர் நிலையில்வைத்து எண்ணப்படுவதற்குத் தடையாகவுள்ள பழக்கவழக்கங்களைக் கற்பிக்கும் நூல்கள், அவை எவையாயிருந்தாலும், எவரால் எழுதப்பட்டாலும், அவைகள் அறவேஒழிக்கப்படவேண்டுமென்பதை எடுத்துக்காட்டவே, சம்பந்தரைப் "பிள்ளை" என்று அழைத்ததை ஆதாரமாகக் கொண்டு இதை எழுதினோம்.

குறிப்பு:-பெரியபுராண ஆராய்ச்சி என்ற தலைப்பில் இதுவரை வெளிவந்த இப்பகுதி, இனிமேல், அந்தந்தக்கிழமைகளில் எழுதப்படும் நிகழ்ச்சிகளுக்கேற்றதலைப்புக்களோடு வெளிவரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

———:(o):———

## களம் காண காளைகள்.

3-ம் பக்கத் தொடர்ச்சி.

போராட்டங்கள் நடந்தவிதத்தைஅந்தப் போராட்டங்களில் கடமையை உணர்ந்தோர்காட்டிய செயல்கள் தாம் இன்றைய காளைகளுக்கு எடுத்துக்காட்டாக இலங்குகின்றன.

குடிசையில் பிறந்து வறுமையிலே வாழ்ந்து ஒட்டிய கன்னமும்உள்ளடைந்தகண்ணும் விரிந்தநெற்றியும் பரந்துகிடக்கும் தலைமயிரும்கொண்ட தோற்றத்துடன் விளங்கி, பள்ளியிலே பாடங்கற்கும் வாய்ப்பும் அறிஞர்குழுவிலேஅறிவுரை கேட்கும்வாய்ப்புபெறுதுவளர்ந்து, ஊக்கத்தால் உயர்ந்துகுடியரசு நாட்டிற்குத்தலைவனானன் ஆப்ரகாம்லிங்கன்.

மிடியிலே அடிபட்டு இடும்பையிலே வளர்ந்து, பசி பசி என்று பரவுவோரின் பழக்கத்தைத் தவிர மற்றையோர் பழக்கத்தைப் பெறுது உழைத்து உழைத்து உருக்குலைந்தோரின் உதவியன்றி ஏனையோர் உதவிஎள்ளளவும்பெறுது ஓடியும் ஒளிந்தும், சிறையிலேவாடியும் வதங்கியும் உழைப்போரின் உரிமைக்காக உழைத்துத் தன்னிகரில்லா ரஷ்யாவிற்குத் தலைவனுனன் லெனின். ஸ்டாலினும் அப்படியே.

எடுத்துக்காட்டுக்கு இலக்கியமாகத் திகழும் அவர்கள் ஏற்றத்துக்கு வழிகோலியவராவார்கள். இனி, எழில்குன்றி ஏங்கிநிற்கும் திராவிடம் இளங்காளைகளையும், இளங்கன்னியரையும் நாடிநிற்கின்றது. ஏற்றசெயல்களை எளிதிலே முடிக்கும் ஆற்றல்படைத்தது இளமையுள்ளம். பட்டமரத்தில் பாயும் ஆணியைவிடப் பசுமரத்தில் பாயும்ஆணிநிலைத்திருப்பதோடு வலுவுடையதாயுமிருக்கும். அச்சமும் ஆட்டமும்கொண்டு வளைந்து நெளிந்து கொடுக்கும் முதுமையுள்ளத்தைக் காட்டிலும், ஆண்மையும் திண்மையும்கொண்டு சிந்தித்துச் செயலாற்றும் இளமையுள்ளம் நாட்டின் நலிவைப் போக்கி நலம் பயக்கத்தேவை. எனவே இளமை யுள்ளம்படைத்த ஏந்தல்களும் ஏந்திழையரும் கடமையுச்செய்ய முன்வரவேண்டும். ஆகவே மாணவர்எழுச்சியுற்றுவிளங்குமாறுபோலமாணவியரும்எழுச்சியுற்றுப் பகுத்தறிவு வழியில் பணிபல புரியவேண்டும். வீழ்ச்சியுற்ற தமிழகத்திலே எழுச்சியைக் காணவேண்டும்.

### பம்பாய்.

3–12–44ல் இந்நகர் தெ. இ. ஆ, கி. வாலிபர் சங்கத்தினுதரவில் தோழர் S. T. சவரிதாஸ் தலைமையில் ஒரு கூட்டம்கூடி திருமணத் தம்பதிகளான தோழர்கள் K. S. பாலகிருட்ணன், இராஜம்மாள் அவர்களைப் பல தோழர்கள் பாராட்டியும், மலர்மாலை சூட்டிமகிழ்வித்தும், மன்றல்வாழ்த்துமடல் படித்துக்கொடுத்தும், பெரும்பரிசுகள்வழங்கியுமான பிறகு, கூட்டம் இனிது முடிந்தது.

## நாயகம்மறைவு—நாட்டினர்துயர்ம்

### கும்பகோணம்

19–12–44ல் ஷையூர் திராவிடர் கழக ஆதரவில் T. M. நாயர் மெமோரியல் ஹாலில் தோழர் K. K. நீலமேகம் தலைமையில் கூடிய கூட்டத்தில் இயற்கை எய்திய தோழர் C. D. நாயகம் அவர்கள் குடும்பத்தாருக்குத் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டது.

### கரூர்.

21—12—44ல் ஷையூர்திராவிடர்கழகத்தில் தோழர் P. K, ஐயா தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர் C D. நாயகம் இயற்கை யெய்தியதைப்பற்றி ஒரு அனுதாபத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### சென்னை

20—12—44ல் ஷை நகர கல்விச்சங்கத்தின் ஆதரவில் தோழர் P. M. பாபு அவர்கள் தலைமையில் நடந்தகூட்டத்தில் தோழர் C. D. நாயகம் மறைவுபற்றி ஒரு அனுதாபத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### சேலம்

18—12—44ல் இவ்வூர் ஜஸ்டிஸ் தியாகராய வாலிபர் கழகத்தின் சார்பாக தோழர் கபார் தலைமையில் கூடிய கூட்டத்தில் தோழர் C. D. நாயகம் பிரிவு பற்றித் தங்கள் அனுதாபத்தைத்தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

### சேலம்

17—12—44ல் இவ்வூர் திராவிடர் கழகக்கூட்டம் தோழர் S. S. கோவிந்தனுர் தலைமையில் கூடிக்கழகக் குழுவினர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் மறைந்த தோழர் C. D. நாயகம் அவர்களின் குடும்பத்தாருக்குஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டது.

### பண்ருட்டி.

18—11—44ல் ஷையூர் திராவிடர் கழகத்தினர் ஆதரவில் தோழர் V. T. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றகூட்டத்தில் தோழர். C. D. நாயகம் மறைந்ததைபற்றி ஒரு அனுதாபத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

## கேட்டீரா, விஷயத்தை!

4-ம் பக்கத் தொடர்ச்சி.

றிருக்கிறது, பொது உடைமை—காங்கிரஸ் குடும்ப வாழ்க்கை. அட! சொரணை கெட்ட ஜென்மமே! என்று சொல்லத் தோன்றுகிறது, ஆனல் பொது உடைமைக்காரர்கள் மகா கோபக்காரர்களல்லவா, இன்குலாப் ஜிந்தாபாத்! என்று பெருங்குரலெடுத்து நம்மை மிரட்டுவார்கள்! காது குடையும், கூச்சலைக்கேட்டால்!! நமக்கேன்வீண்வம்பு, எப்படியோ போகட்டும் அந்த ஜதை!

## மகளிர் இல்லத்தில் புதிய ஆஸ்டல்

### பெண் குழந்தைகட்கு மாதம் 10 ரூபாயில் திட்டம்.

மகளிர் இல்லத்தில் இப்பொழுது இரண்டுவகையான ஆஸ்டல்கள் உண்டு. 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஷ 1-க்கு 25—0—0 கட்டணத்தில்ஒன்றும், மற்றொன்று 7 வயதுக்கு மேற்பட்ட பெண் குழந்தைகட்கு ஷ 1-க்கு 15—0—0 கட்டணத்தில் ஒன்றுமாக நடந்துவருகிறது.

இவைகள் இருக்க, பணவசதிகுறைந்தவருக்குச் சௌகர்யமாகஇருக்கும் பொருட்டு ஷ 1-க்கு 10—0—0 திட்டத்தில் ஒரு ஆஸ்டல்முறையைஏற்படுத்த முடிவு செய்திருக்கிறோம், சாப்பாடு, படிப்பு, உடைமுதலியயாவும் இதிலடங்கும், ஒன்று முதல் ஐந்து வகுப்புவரை படிப்பு உண்டு, மூன்று, நான்கு, ஐந்து வகுப்புக்கு வருகிறபிள்ளைகளின் விண்ணப்பம் முதலில் கவனிக்கப்படும். இதில் சேருகிற பிள்ளைகளின் புத்திசாலிதனத்துக்கும் குடும்பத்தின் நிலைமைக்கும்தக்கபடி உபகாரப்பணமும் கிடைக்கக்கூடும்.

எந்தவிதம்பார்த்தாலும் இந்நாளில் உணவு உடை படிப்பு எல்லாம் 10 ரூபாய்க்குள் அடங்காதென்பது யாவரும் அறிந்தவிஷயம். என்றாலும் பெண்களின்படிப்பை வளர்க்கும் நோக்கத்துடன் இந்த ஏற்பாட்டைச்செய்கிறோம். இந்தவகையில 20 பிள்ளைகள்தாம் இப்பொழுது சேர்த்துக்கொள்ளப்பெறுவர். மற்றவிபரங்கட்கு எழுதித்தெரிந்துகொள்க.

படிப்பைத்தவிர சமையல், கைத்தொழில், பயிர்த்தொழில்களிலும்பயிற்சி கொடுக்கப்படும்.

சோ. முருகப்பா,
அதிபர், மகளிர் இல்லம்,
அமராவதிபுதூர்.

—:(o):—

## கும்பகோணம்

தோழர் வி. சின்னதம்பி அவர்கள் தலைமையில் நேற்றுமாலை நடைபெற்ற இந்நகர் திராவிடர்கழகக் (ஜஸ்டிஸ்கட்சி) கூட்டத்தில் இந்நகரிலுள்ள டாக்டர் டி. எம். நாயர் ஞாபகார்த்தக் கட்டிடத்தைப்புதுப்பிப்பதற்கு, இந்நகரில் "சந்திரோதயம்" நாடகம் நடத்த தோழர் வி. சின்னதம்பியைத் தலைவராகவும், தோழர் பி. ஆர். பொன்னுசாமி, தோழர் கே.கே. நீலமேகம் ஆகியோர்களைச் செயலாளராகவும், கொண்ட ஒருகமிட்டி அமைக்கப்பெற்றதுடன், மேற்படி, கட்டிடப் புதுப்பித்தலுக்கு நன்கொடை வசூலிப்பதற்காக, நகர் திராவிடப் பிரமுகர்களடங்கிய ஒரு சப்கமிட்டியும் அமைக்கப்பெற்றது.

## பார்வதி பி. ஏ.

2ம் பக்கத் தொடர்ச்சி.

சந்திக்கவேண்டும். பிறகு, ஆரும்நாள், பௌர்ணமியன்று நடக்கவேண்டிய ஏற்பாட்டைக்குறித்து நான் சொல்கிறேன்"

இந்தப்பேரப்பேச்சுமுடிந்ததும், பார்த்திபன், உடனே 500 ரூபாய் தந்துதவும்படி ஆலாலசுந்தரருக்குச்சீட்டுஎழுதி ஆண்டிக்கோலத்திலிருந்தபிரமநாயகத்துக்குத்தந்தான். பிரமநாயகம் சீட்டுஎடுத்துக்கொண்டு, புறப்பட்டார், மிக்கசந்தோஷத்துடன். பார்த்திபன் துளியும் சந்தேகிக்கமுடியாதபடி நடந்துகொண்ட பிரமநாயகம், அவனுடைய எதிர்கால வேலைத்திட்டத்தை அறிந்துகொள்ளும் அரிய சந்தர்ப்பம் தனக்குக்கிடைக்கும்படிசெய்வித்த ஆண்டிக்கோலத்தைப் பாராட்டிக்கொண்டே, தனது மாளிகை சென்று, மாறுவேடத்தைக் கலைத்துவிட்டு, முதலமைச்சரைக்காணச்சென்றார். முதலமைச்சர், பிரமநாயகத்தைக் காணவும்இஷ்டப்படவில்லை, என்றபோதிலும், வெறுப்புடன் சிலநிமஷநேரமே பேட்டிதர முடியும்என்றுதெரிவித்தார். பிரமநாயகம் முதலமைச்சரின் கோபத்துக்கும் வெறுப்புக்கும் காரணம் இருப்பது அறிந்தவராதலால், அதற்காக வருந்தவில்லை. மரியாதையுடன் முதலமைச்சருடன்பேசலானார்.

"மிஸ்டர் பிரமநாயகம்! என்ன விசேஷம்?" என்று முதலமைச்சர் கொஞ்சம் அதிகார தோரணையிலே பேச்சைத் துவக்கினார்.

"பார்த்திபன் விஷயமாகத்தான்பேச வந்தேன்" என்று நிதானமாகப்பதிலளித்தார் பிரமநாயகம்.

"பார்த்திபனைப்பிடித்துவிட்டீர் போலிருக்கிறது" என்று கேலியாகக் கேட்டார் முதலமைச்சர்.

"பார்த்திபனைத் தப்பித்துப்போகச் சொன்னவனுக்கு அவனைமீண்டும்பிடிப்பதுகஷ்டமா? பார்த்திபன், என் உள்ளங்கையிலே இருக்கிறான். முதலமைச்சரே! பார்த்திபனை விடுதலை செய்தால், அவனுடைய நடமாட்டத்தைக் கவனித்துக்கொண்டிருந்து தலைமறைவாகஇருக்கும் குமார் என்பவனையும், வெடிகுண்டு மர்மத்தையும் கண்டுபிடிக்க வழி ஏற்படும் என்றுநான் தெரிவித்தேன், தாங்கள் என் யோசனையை முட்டாள்தனம் என்று கருதினீர்கள். என்பதவியைராஜிநாமாச் செய்தேன், ஆனால் துப்பறியும் வேலையை நான் நிறுத்திக்கொள்ளவில்லை. பார்த்திபன் சிறைச்சாலையிலிருந்து தப்பித்துக்கொண்டுபோனது, என் உதவியினால்தான். அது அவனுக்குத்தெரியாது" என்று பிரமநாயகம், கூறிக்கொண்டே, ஆலாலசுந்தரருக்குப் பார்த்திபன்தந்தசீட்டைக் காட்டினார். அதைப் படித்ததும், முதலமைச்சர் சந்தோஷத்தால் துள்ளி எழுந்தார், "அன்னபிஷேக ஆண்டி, யார்?" என்றுகேட்டார், பிரமநாயகத்தின்புன்னகையைக் கண்டார், "ஓஹோ! நீங்கள் அப்போது பண்டார சன்னதியாகி விட்டீரா?" என்று கூறிக்கொண்டே, ஆனந்தமடைந்து பிரமநாயகத்தின் கரங்களைப்பிடித்துக் குலுக்கியபடி, "மிஸ்டர் பிரமநாயகம்!உம்முடைய மூளையே மூளை. நான் வீணுகக்கோபித்துக்கொண்டேன்." என்று கூறினார் டெலிபோனை எடுத்தார். பிரமநாயகம் சரேலென, டெலிபோனை முதலமைச்சர் கரத்திலிருந்து பிடுங்கிக்கீழே வைத்துவிட்டு," ஆலாலசுந்தரரைக்கைதுசெய்யஉத்தரவு பிறப்பிக்க உத்தேசமா!வேண்டாம் இப்போது இந்தக்காரியம் செய்தால், என் திட்டம் பாழாகிவிடும். இன்னமும், பார்த்திபனை என் பார்வையிலே வைத்திருக்கிறேனேயொழிய, குமாரின் இருப்பிடமும் வெடிகுண்டு விஷயமும் தெரிந்துக்கொள்ள முடியாத நிலையிலேதான் இருக்கிறேன். அந்த இரகசியத்தை விரைவிலே அறிந்துகொள்ள சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது, உமது உதவிதேவை" என்று கூறினார்.

"என்னவேண்டும்சொல் மிஸ்டர்பிரமநாயகம், என் கையெழுத்திட்ட கடிதம் வேண்டுமானால் கொடுத்து விடுகிறேன், உமக்கு இஷ்டமான உத்தரவை எழுதிக்கொள், எனக்கு இப்போது உம்மிடம் பரிபூரண நம்பிக்கை பிறந்துவிட்டது" என்று முதலமைச்சர் பூரிப்புடன் பேசினார். பிரமநாயகம், "அவ்வளவு பாக்யசாலியாக நான் ஆக நேரிட்டதுகண்டு மகிழ்ச்சியடைகிறேன், ஆனால் எனக்கு இப்போது அவசரமாகத் தாங்கள்செய்ய வேண்டிய காரியம் அதுஅல்ல. ஒரு ஆயிரம் ரிசர்வ் போலிசாரை என்னுடன் அனுப்பிவைக்கவேண்டும்" என்றுகேட்க முதலமைச்சர் வியப்புற்று "மிஸ்டர் பிரமநாயகம்! எந்த ராஜ்யத்தின் மீது படை எடுக்கப்போகிறீர்? என்ன வேடிக்கை! ஒரு ஆயிரம் ரிசர்வ் போலிசா! எதற்கு! பார்த்திபனிடம் பெரிய பட்டாளம் இருக்கிறதா? குமாரிடம் கம்பெனி இருக்கிறதா? எனக்கொன்றும் விளங்கவில்லையே!" என்று கேட்டார். பிரமநாயகம், "எனக்கும் தெரியத்தான் இல்லை. ஆனால் பண்டாரக்கோலத்திலே இருக்கும் பார்த்திபன், ஆண்டிப்பயல் அன்னபிஷேகத்துக்குப்பிறப்பித்திருக்கும் உத்தரவின்படி நான் நடந்தாக வேண்டுமல்லவா! ஆகவேதான் ஆயிரம் ரிசர்வ்போலீசாரை, ஆண்டிவேடத்திலே சித்தமாக இருக்கச்சொல்லும், நான் இரண்டு நாளிலே வருகிறேன் அவர்களை அழைத்துச்செல்ல" என்றகூறினார். (தொடரும்)

★

தந்தி:—"புறமார்க்" திருச்சி.




### பொன்னேரி.

1945 ஆம் ஜனவரிமாதக் கடைசியில் பொன்னேரித் தாலுக்கா ஆதித்திராவிட மாநாடு நடத்தமுயற்சிகள் நடந்துவருகின்றன.

---

### மகநூர்.

16—12—44ல் டை பூரில் திராவிடர் கழகம் தோற்றுவிக்கப்பட்டுக் கழகஅலுவலர்களையும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

(12-ம் பக்கத் தொடர்ச்சி.)

### காஞ்சி திராவிடர்கழகம். இசைவிழா!

9—1—45 செவ்வாய்

13. எட்டயபுரம் சமஸ்தானவித்வான், தருமபுர ஆதீன இசைப்புலவர், இசையரசு திரு: M. M. தண்டபாணி தேசிகர் & பார்டி ... ... பாட்டு

கட்டணம்:- சீசன் டிக்கட் வரியுள்பட ரூ. 12; 6; 3-8-0. பெண்களுக்கு ரூ. 6; 3-8-0.

கே. எஸ். முனுசாமி, தலைவர். டி. பி. எஸ். பொன்னப்பா, காரியதரிசி.

# காஞ்சி திராவிடர் கழகம். இசை விழா!

(கழகக் கட்டிட உதவி நிதிக்காக)

## 4—1—45 வியாழன்

1. இசைக் கவிவாணர், தமிழ்ச் சங்கீத வித்வான்
மதுரை திரு: மாரியப்ப சுவாமிகள் ... ... ... பாட்டு
மதுரை திரு: வேலுசாமி அவர்கள் ... ... ... ஹார்மோனியம்
மாயவரம் திரு: நடராச சுந்தரம் அவர்கள் ... ... மிருதங்கம்

2. திருவாவடுதுறை ஆதீன நாதஸ்வர வித்வான்
(சக்ராயி) திரு: T. N. R. நடராச சுந்தரம் அவர்கள் ... ... நாதஸ்வரம்
அபிநவ நந்தீசர், தவுல் அரசு, நீடாமங்கலம்
திரு: N. T. மீனாட்சி சுந்தரம் அவர்கள் ... ... )
நீடாமங்கலம் N. T. M. ஷண்முகவடிவேல் அவர்கள் ... ) தவுல்

## 5—1—45 வெள்ளி

3. ஸங்கீத வித்துவபூஷணிகள், தஞ்சை
லக்ஷ்மி, கௌரி சகோதரிகள் ... ... ... பாட்டு
திருவீழிமிழலை, திரு: சுப்பிரமணியம் அவர்கள் ... ... பிடில்
தஞ்சை, திரு: இராமமூர்த்தி அவர்கள் ... ... மிருதங்கம்

4. திருப்பாம்பரம் சங்கீத வித்வான்
திரு: T. N. சுவாமிநாதன் அவர்கள் ... ... ... புல்லாங்குழல்
மாயவரம் வித்வான் திரு: கோவிந்தராஜு அவர்கள் ... ... பிடில்
குற்றாலம் வித்வான் திரு: சிவவடிவேல் அவர்கள் ... ... மிருதங்கம்

## 6—1—45 சனி

5. நாச்சியார் கோயில் வித்வான்
திரு: ரங்கசாமி அவர்கள் ... ... ... பாட்டு
மாயவரம் வித்வான் திரு: பாலு அவர்கள் ... ... பிடில்
சென்னை திரு: வீருசாமி அவர்கள் ... ... மிருதங்கம்

6. சங்கீத வித்வபூஷணி சாட்டியக்குடி
மீனாட்சிசுந்தரம்மாள் அவர்கள் ... ... பாட்டு
திருவீழிமிழலை வித்வான் திரு: சுப்பிரமணியம் அவர்கள் ... பிடில்
புதுக்கோட்டை வித்வ திலகம்
ரெங்கநாயகி அம்மாள் அவர்கள் ... ... மிருதங்கம்

7. குழிக்கரை, அவரையானந்த அருட்பெருஞ் செல்வ வித்வான்
திரு: K. S. பிச்சையப்பா அவர்கள் ... ... நாதஸ்வரம்
யாழ்ப்பாணம், வித்வான் திரு: சண்முகசுந்தரம் அவர்கள் ... )
குழிக்கரை வித்வான் திரு: V. பக்கிரிசாமி அவர்கள் ... ) தவுல்

## 7—1—45 ஞாயிறு

8. திருவாரூர் சங்கீத வித்வான்
திரு: T. V. நமசிவாயம் அவர்கள் ... ... பாட்டு
கும்பகோணம், வித்வான் திரு: சிவவடிவேல் அவர்கள் ... பிடில்
தஞ்சை திரு: இராமமூர்த்தி அவர்கள் ... ... மிருதங்கம்

9. தஞ்சை, சங்கீத வித்வான்
திரு: T. M. தியாகராசன் அவர்கள் ... ... பாட்டு
மாயவரம் வித்வான் திரு: G. பாலு அவர்கள் ... ... பிடில்
தஞ்சை வித்வான் திரு: மகாலிங்கம் அவர்கள் ... ... மிருதங்கம்
சென்னை வித்வான் திரு: வேலாயுதம் அவர்கள் ... ... கஞ்சிரா

10. அண்ணாமலைப் பல்கலைக்கழக இசையாசிரியர், இசைமணி
மயிலம் ப. வச்சிரவேலு அவர்கள் ... ... பாட்டு
கும்பகோணம் வித்வான் திரு: சிவவடிவேல் அவர்கள் ... பிடில்
காஞ்சி திரு: முனுசாமி (ஆபீலா) அவர்கள் ... ... ...மிருதங்கம்

## 8—1—45 திங்கள்

11. தமிழ் இன்னிசைப் பிரயோகர்
சிதம்பரம், திரு: ஜெயராம் அவர்கள் ... ... பாட்டு
தஞ்சை வித்வான் திரு: சந்தானமய்யா அவர்கள் ... ... பிடில்
காரைக்கால் வித்வான் திரு: பாலு அவர்கள் ... ... மிருதங்கம்

12. அகில உலக நாதஸ்வர ஏகசக்ராதிபதி திருவாவடுதுறை
திரு. T. N. இராஜரத்தினம் அவர்கள் ... ... நாதஸ்வரம்
பாலநந்தீஸ்வர, லய, பூஷண, நாச்சியார் கோயில்
திரு: N. P. ராகவன் அவர்கள் ... ... )
திருவாவடுதுறை, திரு: சங்கரன் அவர்கள் ... ... ) தவுல்

(11-ம் பக்கம் பார்க்க.)

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
317—319 Hodgsonpet Conjeeveram.